DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

உதயம் 1284 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday November 13, 2020

# கொரோனாவோடு சேர்ந்து மக்களின் உயிர்களைக் குடிக்கும் துப்பாக்கிகள்...

## ரொரன்ரொவில் துப்பாக்கிதாரிகளின் வெறித்தனத்திற்கு பலியான அப்பாவிச் சிறுவன்

ரொரன்ரோ மாநகரத்தை கொரோனா மிகவும் மோசமாகப் பாதிக்கின்றது என்றும் உயிரிழப்புக்கள் அதிகமாகலாம் என்றும் எனவே மக்கள் வெளியில் செல்லவேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் மாநகர முதல்வர், மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் அனைவரும் இரவு பகலாக பணியாற்றி வருகின்ற இந்த நேரத்தில் கோரோனாவோடு சேர்ந்து மக்களின் உயிர்களைக் குடிக்கும் வெறியாட்டத்தை நடத்தும் துப்பாக்கிதாரிகளின் கொடுமை இன்னொரு பக்கத்தில் அரங்கேறிய வண்ணம் உள்ளது.

கடந்த வார இறுதியில் ரொரன்ரோ மாநகரத்தின் ஒரு பகுதியாக விளங்கும் நோர்த் யோர்க் நகரில் இரண்டு துப்பாக்கிதாரிகளின் வெறித்தனத்திற்கு பலியான 12 வயதுடைய அப்பாவிச் சிறுவன் ஒருவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டாலும் நேற்று உயிர் இழந்துள்ளான்.

கடந்த சனிக்கிழமையன்று பிற்பகல் 2.20 மணியளவில் நோர்த் யோர்க் நகரில் பின்ச் வீதி மற்றும் ஜேன் வீதிச் சந்திக்கு அருகில், தனது தாயாரோடு கடைகளுக்குச் சென்று சாமான்களை வாங்கிய பின்னர் மிகுந்த மகிழ்ச்சியோடு வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த இந்த அப்பாவிச் சிறுவன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, நேற்று வியாழக்கிழமை மரணத்தை தழுவியுள்ளான்.

இந்தச் சம்பவம் பற்றி ரொரன்ரோ பொலிசார் வெளியிட்டுள்ள விபரங்களின் படி, மேற்படி சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அருகில் வாகனம் ஒன்றில் திடீரென வேகமாக வந்த இரண்டு வாலிபர்கள் வாகனத்திலிருந்து குதித்து இன்னொரு வாகனததிற்குள் இருந்தவர்கள் நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், அப்போது சற்று தூரத்தில் தனது தாயாருடன் சென்று கொண்டிருந்த மேற்படி 12 வயதுச் சிறுவன் மீது துப்பாக்கிச் சன்னம் தாக்கியதால் அவனுக்கு படுகாயம் ஏற்பட்டு உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டானாம். ஆனால் அவனது உயிரைக் காப்பாற்ற இயலாமல் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் அவன் மரணத்தைத் தழுவினான்.

மேற்படி துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியவர்கள் சுமார் 30 தடவைகள் சுட்டார்கள் என்றும் அவர்கள் கொலைவெறியோடு யாரை நோக்கிச் சுட்டார்களோ அவர்கள் காயங்களுக்குள்ளாக, ஒன்றுமே அறியாத அப்பாவிச் சிறுவன் மரணமானது ரொரென்ரோ நகரத்தை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

# வெள்ளை மாளிகைக்குள் "ஜனாதிபதியாக" புகுவதற்கு முன்பாகவே தனது தலைமை அதிகாரியை நியமித்த ஜோ பைடன்



ஜனாதிபதி ஒபாமா காலப்பகுதியில் அமெரிக்காவின் உதவி ஜனாதிபதியாகப் பதவி வகித்து வெள்ளை மாளிகைக்குள் நிம்மதியாகப் பணியாற்றிய ஜோ பைடன் அவர்கள் தற்போது தேர்தலில் வெற்றியை ஈட்டியிருந்தாலும் ட்ரம்பின் தவறான குற்றச்சாட்டுக்களால், சற்று மனந்தளர்ந்த நிலையில் இருந்தாலும், ஜனாதிபதியாக தான் பதவியேற்கவுள்ள ஜனவரி 2021 தொடக்கம் தன்னோடு பணியாற்றவுள்ள அதிகாரிகளை நியமனம் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் என்பதை அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

.இது இவ்வாறிருக்க, தமது நீண்ட நாள் உதவியாளரான ரோன் கிளைன் என்பவரை, வெள்ளை மாளிகை பணியாளர் தலைமை அதிகாரியாக ஜோ பைடன் நியமித்துள்ளார் என்பதை பலர் வரவேற்றுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியின் செயல் அலுவலகத்தின் முழுமையான மேற்பார்வை பொறுப்பை கவனிப்பதுடன் ஜனாதிபதியின் செனட் ஆலோசகராகவும் ரோன் கிளயின் செயல்படுவார் என்ற அறிவிப்பும் இந்த செய்தியோடு இணைந்து வெளியாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

முக்கிய பிரச்சினைகளில் புதிய ஜனாதிபதி ஜோ பைடனுக்கும் துணை ஜனாதிபதி கமலா ஹாரிசுக்கும் உதவக் கூடிய திறமையாளர்கள் குழுவையும் ரோன் கிளைன் ஏற்படுத்துவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, 2009 மற்றும் 2014 இல் ஏற்பட்ட பொருளாதார, சுகாதார நெருக்கடி காலக்கட்டங்களில் ரோன் கெயின் சிறப்பாக பணியாற்றியவர் என ஜோ பைடன், ரோன் கெயினை பாராட்டி உள்ளார். இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள கிளைன் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா காலத்தில் வெள்ளை மாளிகையில் மூத்த உதவியாளராகவும் துணை ஜனாதிபதி அல்கோரின் தலைமை அதிகாரியாகவும் இதற்கு முன் பதவி வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

அறிவித்தல்களை உலகெங்கும் உடனுக்குடன் உங்கள் உறவுகளுக்கு கொண்டு செல்ல வேண்டுமா?
எமது கனடா உதயன் பத்திரிகையின் இணையத்தளமான www.uthyannews.ca இல் பிரசுரமாகும் அறிவித்தல்கள் மற்றும் அவசர விளம்பரங்கள் உதயன் பத்திரிகையிலும் அத்துடன் எமது சகோதர இணையத்தளங்களான www.nanban.ca மற்றும் www.voicefilankai.lk ஆகியவற்றில் பிரசுரம் செய்யப்படும்.
நண்பன் | Voice of ilankai | World Wide Web
தொலைபேசி இலக்கங்கள்: கனடா +1 416-587-0552 கொழும்பு: +94 777 555 026 யாழ்ப்பாணம்: +94 7666143 074 சென்னை: +91 784500 6977

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

www.mortgageSolutions.ca

SAVE UPTO 75% REFINANCE

MONTHLY SAVING $2,478



KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# உலக நாடுகளை அச்சுறுத்தும் கொரோனாவின் 'ஆட்டமும்' பொருளாதார 'முடக்கமும்'

திடீரென ஒரு சில வாரங்களில், உலகை ஆட்டம் காண வைத்த கொரோனாவின் கோரத் தாண்டவம் இன்னும் ஓய்ந்தபாடாக இல்லை. இலங்கை இந்தியா அமெரிக்கா கனடா என்று நாடுகளின் பெயர்களை நாம் அடுக்கிக் கொண்டு போகின்றபோது உலகின் அனைத்து நாடுகளிலும் எமது தமிழ் மக்களில் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளதை நாம் செய்திகள் வாயிலாக அறிந்த வண்ணம் உள்ளோம்.

அமெரிக்காவில் ட்ரம்பின் 'தாண்டவத்தையும்' தாண்டி கொரோனாவானது தனது வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றது. அங்கு மரணங்கள் தொடர்கின்றன. இந்தியாவும் அதற்குள் அடங்குகின்ற தமிழ்நாட்டிலும் மரணங்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. தமிழ்நாட்டு நண்பர்களோடு உரையாடுகையில் "தமிழ்நாடு அரசாங்கம் மக்களை கைவிட்டு விட்டது" என்று சொல்லுகின்ற அளவிற்கு அங்கு கொரோனாவைக் கையாளும் விதம் மாறியிருக்கின்றது என்று உணரலாம்.

கனடாவிலும் அனைத்து மாகாணங்களிலும் கொரோனா தொடர்பான 'கலக்கம்' தான் அரசியல் தலைவர்களிலிருந்து சாதாரண மக்கள் வரை அதிர்ச்சி வைத்தியம் பார்க்கத் தொடங்கியுள்ளது. பல மாகாணங்கள் தடுமாறுகின்ற அளவிற்கு கொரோனா நாடுகளையும் நகரங்களையும் நடுத்தெருவிற்கு கொண்டு செல்லப்போகின்றதோ என்று எண்ணத் தொடங்கிவிட்டார்கள் மக்கள்.

இலங்கையிலும் திடீரென கொரோனா மரணங்கள் அதிகரித்தும் தொற்றாளர்கள் மேலும் கண்டுபிடிக்கப்பட்டும் அங்கும் அரசாங்கமும் அதிகாரிகளும் நடுங்கத் தொடங்கியுள்ளார்கள்

இப்போது உலக நாடுகள் "கொரோனாவினால் எழுந்துள்ள மருத்துவப் பிரச்சனைகளை மட்டுமல்ல, கொரோனாவினால் பூதாகரமாக எழுந்து நிற்கும் பொருளாதார பின்னடைவுகளைப் பற்றியும் யோசிக்கத் தொடங்கியுள்ளன. பல உலக நாடுகள் தற்போது ஊரடங்கு உத்தரவை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தி வைத்திருப்பதா அல்லது மக்களை சமூக முடக்கம் என்பதன் பேரில் தொடர்ச்சியாக வீட்டுக்குள் வைத்திருப்பதா அல்லது எது வந்தாலும் பரவாயில்லை கட்டுப்பாடுகளைத் தளர்த்தி உயிரிழப்புகளுக்கு மத்தியில் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவோம் என்றும் சிந்திக்கத் தொடங்கியுள்ளன என்பதையும் செய்திகள் வாயிலாக அறிகின்றோம்.

எத்தனை காலத்துக்கு தொடர முடியும் என்ற கேள்விகளுக்கு அப்பால் தீவிரமாக சிந்தித்து முடிவுகளை எடுத்து வருகின்றன. வினா இங்கே தான் எழுகின்றது. மக்களை வீடுகளுக்குள் தொடர்ச்சியாக முடக்கி வைத்தால் அவர்களின் குடும்ப பொருளாதாரம் என்னவாகப் போகின்றது? அன்றாடம் தொழில் செய்து கிடைக்கின்ற வருமானத்தை வைத்துக் கொண்டு சீவனோபாயம் நடத்துகின்ற குடும்பங்களின் கதி என்ன? அதே-சமயம் அரசாங்க திணைக்களங்கள் அத்தனையும் முடங்கிக் கிடக்கும் நிலைமை ஏற்படுமானால் நாட்டின் நிர்வாக இயந்திரம் இயங்குவது எவ்வாறு? அரசுக்குக் கிடைக்கின்ற வருமானங்கள் இழக்கப்படுவதால் ஏற்படப் போகின்ற பாதிப்புகளை எத்தனை நாட்களுக்கு சமாளித்தபடி செல்ல முடியும்? அரசுக்கான வருமானம் குன்றும் பட்சத்தில் மக்களுக்கான சேவைகளை எவ்வாறு தங்குதடையின்றி வழங்க முடியும்? இந்த விடயமானது உலக நாடுகள் அனைத்திற்கும் பொதுவானதாக மாறிவிட்டது.

இவ்வாறு பார்க்கின்ற போது, இனி வரப்போகின்ற நாட்கள் உலக நாடுகள் அனைத்திற்கும் சவால்கள் நிறைந்தவையாகவே இருக்கப்போகின்றன என்பதையே இடம்பெறுகின்ற நகர்வுகள் காட்டி நிற்கின்றன.

## GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244

## BASEMENT வாடகைக்கு உண்டு

Birchmount / Eglinton
சந்திப்பிற்கு அருகில்
2 bedroom basement with separate entrance
மற்றும் எல்லாவித வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Close to TTC, subway, & shopping.
குடும்பம் விரும்பத்தக்கது.

Call: (416) 821-2181

## விசேட வாழைஇலைச் சாப்பாடு. ஓடர் செய்து பெற்றுச் செல்லுங்கள்

ஸ்காபுறோவில்
மோர்னிங்சைட் - செப்பர்ட்
சந்திப்புக்கு அருகில்
வாழை இலைச்சாப்பாடு மற்றும் Lumprice ஆகியவற்றை ஓடர் செய்து பெற்றுச் செல்லுங்கள்.
வெள்ளிக்கிழமைகளில்
வாழை இலையில் 6 மரக்கறிகளுடன் சாப்பாடு - $6.50.
சனிக்கிழமைகளில் மட்டன், சிக்கன் Lumprice - $14.00 மட்டுமே.

Call: (416) 832-6345

## வேலைக்கு ஆட்கள்

ஸ்காபுறோவில்
Markham / Ellesmere
சந்திப்புக்கு அருகில்
Warehouse Workers and Forklift Driver Needed for Full-time for Morning Shifts

- Looking for Warehouse Workers & Forklift Driver to add to our team.
- We are looking for hard-working and dedicated people for a long term.

Essan:
(647) 993-2872

# யாழ். பல்கலைகழக கலைப் பீட மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் தொடர்பான அறிக்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்களுக்கும், மூன்றாம் வருட மாணவர்களுக்குமிடையில் கடந்த ஒக்டோபர் மாதம் 08 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட தனிநபர் ஆயத்தினால் 130 பக்கங்களைக் கொண்ட விரிவான விசாரணை அறிக்கை பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கென, பல்கலைக்கழகப் பேரவையினால் நியமிக்கப்பட்ட தனி நபர் விசாரணை ஆயத்தின் தலைவர் ஓய்வு நிலைப் பேராசிரியர் மா. நடராஜசுந்தரத்தினால் இந்த விரிவான விசாரணை அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த விரிவான அறிக்கை அடுத்த வாரம் இடம்பெறவுள்ள பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, விசாரணை அறிக்கையின் உள்ளடக்கங்கள் தீவிரமாக ஆராயப்பட்டு, விசாரணை அதிகாரியினால் முன் மொழியப்பட்டுள்ள சிபார்சுகளின் அடிப்படையில் பேரவைக்கான பல்கலைக் கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரை முன்வைக்கப்படும்.

பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையில், பல்கலைக்கழகத்தின் சகல பீடாதிபதிகளும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட இரண்டு பேரவை உறுப்பினர்களும், மாணவ ஆலோசகர் ஒருவரும், பிரதிச் சட்ட நிறைவேற்று அதிகாரி ஒருவரும், போதனைசார் விடுதிக் காப்பாளர்கள் இருவருமாக இருபது பேர் அங்கம் வகிப்பதுடன், பதிவாளரின் நியமனப் பிரதிநிதியாக மாணவர் நலச் சேவைகளுக்கான உதவிப்பதிவாளர் செயலாளராகவும் செயற்படுகின்றார்.

பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரையின் அடிப்படையில் சம்பவம் தொடர்பாகப் பேரவையினால் இற்றைப்படுத்தப்படும் தீர்மானம் துணைவேந்தரால் நடைமுறைப்படுத்தப்படும் என பல்கலைக்கழக வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது.

கடந்த மாதம் கடந்த 8 ஆம் திகதி கலைப்பீடத்தின் இரண்டாம் மூன்றாம் வருட மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட தகறாறு முற்றி மோதலாகியிருந்தது. அன்று மாலை வளாகத்தினுள் இடம்பெற்ற மோதலின் போது சமரசம் செய்ய முற்பட்ட பல்கலைக்கழகத் துணைவேந்தர் உட்பட அதிகாரிகளுடன் முரண்பட்டுக் கொண்ட மூன்றாம் வருட மாணவர்கள் துணைவேந்தர் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் தம்மைத் தாக்கியதாக ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தனர்.

எனினும் உடனடியாகவே மாணவர்கள் மத்தியில் பேசிய துணைவேந்தர் தான் உட்பட அனைவரையும் விசாரணை செய்யும் வகையில் சம்பவம் குறித்து விசாரிப்பதற்குச் சுயாதீன விசாரணைக்குழு ஒன்று பேரவையினால் அமைக்கப்படும் என்று வாக்குறுதி வழங்கியதை அடுத்து மாணவர்கள் அன்றிரவு கலைந்து சென்றிருந்தனர்.

மறுநாள்இ 9 ஆம் திகதி கூடிய பல்கலைக்கழகப் பேரவை வணிக முகாமைத்துவ பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும் ஓய்வு நிலைப் பேராசிரியருமான மா. நடராஜசுந்தரத்தை விசாரணையாளராகக் கொண்டு தனிநபர் விசாரணை ஆயம் ஒன்றினை நியமித்திருந்தது.

தனிநபர் விசாரணை ஆயத்தின் விசாரணைகள் கடந்த 21 ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டது. தாக்குதல் சம்பவத்தின் போது அவ்விடத்தில் நின்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் பாதுகாப்பு ஊழியர்களும் சாட்சியமளித்திருந்தனர். அதன் பின் சம்பவம் தொடர்பில் – சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட இரண்டாம் வருட மூன்றாம் வருட மாணவர்கள் சாட்சியமளித்திருந்தனர். அதன் பினனர் துணைவேந்தர் மற்றும் கலைப்பீடாதிபதி ஆகியோரின் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை விசாரணை அறிக்கை துணைவேந்தரிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.


இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!
Happy Deepavali from
the Ontario NDP Caucus!
Andrea Horwath
Leader of the
Official Opposition
Ontario NDP NPD de l'Ontario


முதியோர் பராமரிப்பு
நெருக்கடியில் உள்ளது
நம் அன்புக்குரியவர்கள்
சொந்த வீட்டைப் போல உணரும்
கவனிப்புக்கும் ஆதரவிற்கும் தகுதியானவர்கள்
The NDP Caucus has a plan for better seniors care
READ IT HERE: ondpcaucus.com/longtermcare
Ontario NDP NPD de l'Ontario
Aging Ontarians Deserve the Best
A new, public and non-profit home care and long-term care system


SKN
SKN FINANCIAL
www.sknfinancial.com
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்
$ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
$ புதிய மனைஸ்ன வாங்குவதில் பணச்சிக்கலா?
$ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
$ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
$ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்
முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது
உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..[2% முதல்]
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com
SCARBOROUGH
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238
BRAMPTON
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

இலங்கை செய்திகள்

# தமிழக மீனவர்களின் படகுகள் அழிக்கப்படுவதை இலங்கை அரசு தடுக்கவேண்டும் - ஸ். நிஷாந்தன்



தமிழக மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டு வடக்கு துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 121 படகுகளை அழிக்க எமது கௌரவ நீதிமன்றங்கள் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் இச் செயற்பாட்டை இலங்கை அரசு மனித நேயத்துடன் அணுகித் தடுத்து நிறுத்தவேண்டும் என்று தமிழ்தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் எஸ். நிஷாந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இன்று புதன்கிழமை (11) தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் எஸ்.நிஷாந்தன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக மீனவர்களின் படகுகளை அழிப்பதன்மூலம் அவர்களது வாழ்வாதாரத்தை மட்டும் அல்ல அவர்களது மிகப்பெரிய தொழில் மூலதனத்தையும் பாதிக்கும் இந்த நடவடிக்கையை மனிதாபிமான முறையில் இலங்கை அரசு கையாளவேண்டுமே தவிர அநீதியான முறையில் தேவையற்ற செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடாது.

தமிழக மீனவர்கள் தங்களது கடல் எல்லையை மீறி இலங்கை கடற்பரப்புக்குள் மீன்பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படை தமிழக மீனவர்களை கைதுசெய்தும் அவர்களின் படகுகளை பறிமுதல்செய்தும் நீதிமன்றங்கபளூாடாக சட்டநடவடிக்கை எடுத்து சிறைகளில் அடைக்கப்படுகின்றார்கள். அதன் பின்னர் பல மாதங்களுக்குப்பிறகு தண்டனை காலத்தை நிறைவு செய்தபின் கௌரவ நீதிமன்றத்தால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்படுகின்றார்கள்.

இந் நிலையில் தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும் அவர்களுடைய படகுகள் பெரும்பாலும் விடுவிக்கப்படுதில்லை அவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகள் தான் இப்போது அழிக்கப்படவுள்ளன.

இலங்கையின் கௌரவ நீதிமன்றங்களின் இந்த நடவடிக்கைகள் இரு நாட்டு உறவுகளிடையே தேவையற்ற பதற்றத்தை ஏற்படுத்தக்கூடியவை. இப்போது அழிக்க உத்தரவிடப்பட்டுள்ள படகுகள் முடிவடைந்த வழக்குகளில் சம்பந்தப்பட்டவையாக இருந்தாலும் அவை முடிவடைந்த வழக்குகளிலிருந்து ஏற்கனவே விடுவிக்கப்பட்டவைதான். இப்படியிருக்கும் போது அவற்றை அழிக்க கௌரவ நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்பது மிகுந்த துயரத்தை தருகிறது.

எனவே, இலங்கை அரசு இப் பிரச்சனையை மனிதாபிமான முறையில் கையாண்டு தமிழக மீனவர்களின் படகுகளை மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். வங்கக்கடலில் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கடந்த 2014ஆம் ஆண்டுவரை பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் 42 படகுகள் அந்த ஆண்டின் இறுதியில் அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

அதன்பின் 2015ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை பறிமுதல் செய்யப்பட்ட 94 படகுகள் ஊர்காவல்துறை நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டிலும், 37 படகுகள் மன்னார் நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டிலும் வைக்கப்பட்டிருந்தன. இந்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் அப்படகுகளை தமிழக மீனவர்களிடம் ஒப்படைக்க கடந்த 2018ஆம் ஆண்டின் இறுதியில் சம்மந்தப்பட்ட நீதிமன்றங்கள் அனுமதி வழங்கின.

அதன்படி கடந்த ஆண்டு இலங்கை வந்த தமிழக மீனவர்கள் 10 படகுகளை மட்டும் மீட்டுவந்தனர். மீதமுள்ள படகுகளை சீரமைக்க வேண்டியிருந்ததால் அதற்கான பணியாளர்களை அழைத்து செல்ல சிறிது கால அவகாசம் தேவைப்பட்டது. அதற்குள் அடுத்தடுத்து பல சிக்கல்களும், இந்த ஆண்டின் தொடக்கத்தில் கொரோனா பரவலும் ஏற்பட்டதால் இங்கு வந்து படகுகளை மீட்டு எடுத்துக்கொண்டு செல்ல அவர்களால் முடியவில்லை.

இலங்கை அரசும் மதிப்புக்குரிய நீதிமன்றமும் மேலும் ஒரு சில மாதங்கள் கால அவகாசம் கொடுத்து, அதற்குள்ளாக 121 படகுகளையும் எடுத்துச் செல்லும்படி உத்தரவிட வேண்டும். மேலும் இலங்கையின் மதிப்பிற்குரிய நீதிமன்றங்கள் தமிழக மீனவர்களின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து எதுவும் கேட்காமல் தன்னிச்சையாக முடிவெடுத்து படகுகளை அழிக்க ஆணையிட்டிருப்பது தான் தமிழக மீனவ உறவுகள் தரப்பில் பெரும் கவலையையும், அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஒவ்வொரு படகின் மதிப்பும் பல கோடிகள் இருக்கும். அந்த படகுகளை அழிப்பது மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் மூலதனத்தையும் முற்றிலுமாக அழித்துவிடும். தமிழக மீனவர்களின் 121 படகுகள் அழிக்கப்பட்டால் மேலும் எமது கடல் பகுதி மாசு அடையவே வழி வகுக்கும் 121 படகுகளையும் தமிழக மீனவ உரிமையாளர்களிடம் ஒப்படைப்பது தான் மிகவும் எளிமையான தீர்வு ஆகும்.

எனவே, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அனைத்து படகுகளையும் சீரமைத்து எடுத்துச் செல்வதற்கு தமிழக மீனவர்களுக்கு கால அவகாசம் கொடுக்கவேண்டும் என இலங்கை அரசிடமும் சம்மந்தப்பட்ட நீதிமன்றங்களிடமும் தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை கேட்டுக்கொள்கின்றது.

# சாவகச்சேரியில் 11ம் திகதி புதன்கிழமை இடம்பெற்ற ரவிராஜின் 14 ஆவது நினைவேந்தல்!

## படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ரவிராஜின் 14ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு சாவகச்சேரியில் புதன்கிழமை இடம்பெற்றது



சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு முன்னால் அமைந்துள்ள அமரர் ரவிராஜின் உருவச் சிலைக்கு முன்பாக இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.இதன்போது அன்னாரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் அமரர் ரவிராஜின் துணைவியார் சசிகலா ரவிராஜ், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம், சரவணபவன் மற்றும் அரசியல் பிரதிநிதிகள், பிரதேச சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# மண்டைதீவு பகுதியில் கடற்படைக்கு காணி சுவீகரிக்கும் முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது!



யாழ்ப்பாணம் - மண்டைதீவு பகுதியில் பொது மக்களின் காணிகளை கடற்படையினருக்கு சுவீகரிக்கும் முயற்சி, பொதுமக்களின் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

மண்டைதீவுச் சந்தியில் கடற்படை முகாம் அமைந்துள்ள பொது மக்களுக்கு சொந்தமான காணியை கடற்படையினருக்கு சுவீகரிக்கும் நோக்கில் நில அளவைத் திணைக்களத்தினால் அளவீடு செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, காணி உரிமையாளர், அப்பகுதி மக்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அரசியல் பிரமுகர்கள் அங்கு வந்திருந்தனர். அத்துடன், காணி அளவீடு செய்யும் இடத்திற்கு முன்பாக இவர்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்திய நிலையில் காணி அளவீடு செய்யும் நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொது செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், வேலணை பிரதேச சபையின் உறுப்பினர்களான கருணாகரன் நாவலன், சிறிபத்மராசா உள்ளிட்ட பலர் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

# யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளரை தாக்கியமை தொடர்பில் மூவர் கைது!


யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் ஒருவர் மீது வீடு புகுந்து தாக்குதல் மேற்கொண்ட குற்றசாட்டில் மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ் நகர் பகுதியில் வசிக்கும் ஊடகவியலாளரான எஸ். முகுந்தன் என்பவர் மீது நேற்று முன்தினம் புதன்கிழமை, குழுவொன்று தாக்குதல் நடத்தி, அவரது கையடக்கத் தொலைபேசியும் பறித்து சென்றது.

கொரோனா தொற்று நாடளாவிய ரீதியில் அதிகரித்து வரும் நிலையில் சுகாதார விதிமுறைகளை பேணாது அமைப்பு ஒன்று உதவி வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சாட்டி, அது தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த ஊடகவியலாளர் தனது முகநூலில் நேற்று முன்தினம் இரவு பதிவொன்றினை இட்டிருந்தார்.


பதிவினை நீக்க கோரி குறித்த அமைப்பை சேர்ந்தவர்கள் கடும் அழுத்தம் கொடுத்து, மிரட்டல் விடுத்ததாகவும், அதற்கு ஊடகவியலாளர் சம்மதிக்காத நிலையில் நேற்று காலை அவரது வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த கும்பல் ஒன்று அவர் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன், அவரது கையடக்க தொலைபேசியையும் பறித்து சென்றுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் ஊடகவியலாளரால் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டனர் எனும் குற்றச்சாட்டில் விமல், கிேரகுமார் மற்றும் ஜீவமயூரன் ஆகிய மூவரை கைது செய்துள்ளனர்.

# கிளிநொச்சியில் தற்காலிக வீட்டு சுவர் இடிந்து விழுந்ததில் 8 வயது சிறுவன் பலி



கிளிநொச்சியில் தற்காலிக வீட்டு சுவர் இடிந்து விழுந்ததில் 8 வயது சிறுவன் பலியான சம்பவம் கிளிநொச்சியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த சில நாட்களாக பெய்த பலத்த மழை காரணமாக குறித்த பகுதியில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதன் காரணமாக தற்காலிக வீட்டின் சுவர் ஈரமடைந்து நேற்று வியாழ்க்கிழமை காலை விழுந்ததில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தொண்டமான்நகர் பகுதியில் குறித்த சம்பவம் இன்று காலை 11 மணியளவில் பதிவாகியுள்ளது. சிறுவனது தாயார் உணவு தயாரித்துக்கொண்டிருந்தபோது உயிரிழந்த சிறுவன் உணவருந்திக்கொண்டிருந்துள்ளான் இதன்புாது திடீரென சுவர் இடிந்து விழுந்ததில் இடிபாட்டுக்குள் சிக்கிய சிறுவன் அயலவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளான். வைத்தியசாலையில் சிகிசை பலனின்றி குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவத்தில் 8 வயதான நிரோயன் ருசாந்தன் என்ற சிறுவனே பலியாகியுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிசார் முன்னெடுத்துள்ளனர்.



குறித்த பகுதியில் வெள்ள நீர் தேங்குவது தொடர்பான பல்வேறு தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு சென்றும் எவ்வித தீர்வும் எட்டப்படவில்லை என பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இதனால் வருடம் தோறும் 40 குடும்பங்கள் வரை பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். கரைச்சி பிரதேச சபையினால் குறித்த வடிகாணமைப்பு வசதியினை ஏற்படுத்தி தருமாறு பலமுறை கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது, ஆனால் இதுவரை தீர்வு எட்டப்படாத நிலையில் இன்று ஒரு சிறுவனின் உயிர் பிரிந்துள்ளதாக மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

இதேவேளை சஜித் பிரேமதாசவினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தின் மிகுதி பணம் வழங்கப்படாமையினாலேயே நிரந்தர வீட்டுக்குள் செல்ல முடியாது போயுள்ளதாகவும், அவர்களிற்கான நிரந்தர வீடு அமைப்பதற்கான மிகுதி பணத்தினை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பிரதேச மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

# ஜோ பைடனும், கமலா ஹாரிஸீம் பதவியேற்க தயாராகி வருகையில் வெள்ளை மாளிகை அதைத் திட்டமிட்டு தாமதப்படுத்துகின்றது



அமெரிக்காவில் கடந்த 3ம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றியைப் பெற்றுக் கொண்டவர்களான ஜோ பைடனும், கமலா ஹாரிஸூம் முறையே ஜனாதிபதியாகவும் துணை ஜனாதிபதியாகவும் பதவியேற்க தயாராகி வரும் வேளையில் அந்த நடைமுறைகளை தாமதப்படுத்தும் வகையில் வெள்ளை மாளிகை செயல்படுவதாக சில உலக நாடுகளின் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளதாக அமெரிக்க செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், புதிதாக ஆட்சிக்கு வரும் ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதிக்கு தேவையான சம்பிரதாய அடிப்படை வசதிகளை வழங்கும் பொறுப்பை கவனிக்கும் பொது சேவைகள் நிர்வாகத்துறை, அந்த வசதிகளுக்கான நிதியை ஒதுக்கவில்லை. ஜோ பைடனை "முறைப்படி ஜனாதிபதி பதவிக்கு தேர்வானவர்" ஆக இன்னும் அந்த அலுவலகம் அங்கீகரிக்கவில்லை என்றும் டொனால்ட் ட்ரம்ப் கடந்த 2016ல் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட போது, அமெரிக்கவின் வெள்ளை மாளிகையின் நடைமுறைகளுக்கு ஏற்ப அப்போதைய ஜனாதிபதி ஒபாமா அவர்கள் எவ்வளவு கண்ணியமான முறையில் தனது பதவியைத் துறந்து அதை ட்ரம்பிடம் ஒப்படைத்தார் என்பதையும் பல அரசியல் தலைவர்கள் அமெரிக்காவில் பத்திரிகையாளர்களிடம் உரையாடுகையில்தெரிவித்துள்ளார்கள்.

இது இவ்வாறிருக்க, அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் தோல்வியை ஏற்காமல் டொனால்ட் டிரம்ப் இருப்பது தனக்கு சங்கடத்தை தருகிறது என்று அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் அந்நாட்டு ஜனாதிபதியாக பதவியேற்கவிருக்கும் ஜோ பைடன் தெரிவித்துள்ளார். ஆனால், ஆட்சிப்பொறுப்பை ஏற்கும் நடவடிக்கையில் எதுவும் தன்னை தடுக்காது என்று ஜோ பைடன் தன்னுடன் தொடர்பில் உள்ள வெளிநாட்டுத் தலைவர்களிடம் தெரிவித்து வருகிறார்.

ஜனாதிபதி தேர்தல் வாக்குகள் எண்ணப்பட்டு கிட்டத்தட்ட முடிவடையும் நேரத்தில், "நான் தோல்வி அடைவேன் என தொலைக்காட்சிகள் கணித்தாலும் கடைசியில் நானே வெற்றி பெறுவேன்", என்று டிரம்ப் தெரிவித்திருந்தார். அமெரிக்க தேர்தலில் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் வரும்போது, வெற்றியாளர் தொடர்பான கணிப்புகளை அமெரிக்க ஊடகங்கள் வெளியிடுவது வழக்கமான செயல்பாடாகும்.

அமெரிக்க தேர்தலில் மாநில அளவில் வெளிவந்த முடிவுகள் அடிப்படையில் அதிகாரபூர்வ முடிவுகளோ சான்றிதழ்களோ எந்தவொரு வேட்பாளருக்கும் இதுவரை வழங்கப்படவில்லை. ஒரு சில தொகுதிகளில் தற்போதும் வாக்குகள் எண்ணப்பட்டு வருவதே இதற்கு காரணம். இந்த நடைமுறைகள் அனைத்தும் முடிவடைந்து வரும் டிசம்பர் மாதம் 14ஆம் திகதி அமெரிக்க தேர்தல் சபை குழுக்கூட்டம் நடக்கும் போதே இறுதியான வாக்குகளின் முடிவு தெரிய வரும்.



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், தனது தேர்தல் தோல்வியை ஏற்க மறுப்பது குறித்து ஜோ பைடனிடம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்கு அவர், "உண்மையை சொல்வதென்றால் எனக்கு அது சங்கடத்தை தருவதாக கருதுகிறேன்" என்று பதிலளித்தார்.

"ஒரு விடயத்தை என்னால் தெரிவிக்க முடியும். இப்படி நடந்து கொள்வது ஜனாதிபதி பதவி வகிப்பவருக்கு அழகல்ல. கடைசியில் அனைவரும் எதிர்பார்க்கும் ஜனவரி 20ஆம் திகதி வரத்தான் போகிறது. அப்போது என்ன நடக்கும் என்பதை அனைவரும் பார்க்கத்தான் போகிறார்கள்", என்றும் ஜோ பைடன் கூறினார். ஜனவரி 20ஆம் திகதிதான் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி பதவியேற்கும் தினமாகும்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி உறுதியானதையடுத்து, ஜோ பைடனுக்கு பல்வேறு நாடுகளின் தலைவர்களும் தொலைபேசி வாயிலாக வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன், அயர்லாந்து பிரதமர் டீரோக் மிஷேல் மார்ட்டின், பிரான்ஸ் ஜனாதிபதி எமானுவேல் மக்ரோன், ஜெர்மன் ஆட்சித்துறைத் தலைவர் ஏங்கலா மெர்க்கல் உள்ளிட்டோர் ஜோ பைடனுடன் செவ்வாய்க்கிழமை தொலைபேசியில் பேசினார்கள். இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ஜோ பைடன், "என்னுடன் பேசும் தலைவர்கள் அனைவரிடமும், அமெரிக்கா மீண்டும் களத்தில் இறங்கும். ஆட்டத்தில் இடம்பெறும் என கூறி வருகிறேன்" என்றார்.



# இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ள இளைஞர்களுக்கு காணி வழங்கும் திட்டத்தை எமது இளைஞர்கள் பயன்படுத்த வேண்டும்



தாயக நலனில் அக்கறை கொண்ட தமிழ் அன்பர்கள் வேண்டுகோள் "அண்மையில் இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ள இளைஞர்களுக்கான காணித் துண்டுகள் வழங்கும் திட்டத்தை எமது இளைஞர்கள் பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் பல நன்மைகள் எதிர்காலத்தில் அவர்களுக்கு கிடைக்கும். எனவே சற்றும் தாமதிக்காது, மேற்படி காணித்துண்டுகளை பெற்றுக் கொள்ளும் வகையில் விண்ணப்பங்களை உரிய அரச அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டுகின்றேன்".

இவ்வாறு எமது தாயக நலனில் அக்கறை கொண்ட தமிழ் அன்பர் எமது உதயன் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்துள்ள பிரசுரம் ஒன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி வேண்டுகோளில் அடங்கியுள்ள விபரங்களை நாம் கீழே தருகின்றோம் ஒரு லட்சம் ஏக்கர் காணித்துண்டுகளை இளைஞர்களுக்கு வழங்கி விவசாய உற்பத்தி உள்ளிட்ட சுய தொழில் வாய்ப்புகளை மேம்படுத்த இலங்கை அரசாங்கம் முடிவெடுத்து விண்ணப்பங்கள் கோரியது!! .. ஆனால் எங்கள இளைஞர்கள் பலர் இதில் அக்கறை எடுப்பதாக தெரியவில்லை!! மிகக்குறுகிய விண்ணப்பங்களே கிடைத்ததால் விண்ணப்ப முடிவு திகதி 15.11.2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது!!

நம் இளைஞர்கள் அக்கறை காட்டவில்லை என்ற செய்தி அதிர்ச்சியாக இருந்தது!! காணி கிடைத்தால் முழுநேர விவசாயம் தான் செய்யவேண்டியதில்லை!!! காணியில் வெறுமனே விவசாயம் மட்டும் தான் செய்ய முடியும் என்ற மாயையில் இருந்து முதலில் வெளியே வாருங்கள்!!

நீங்கள் இன்று பெருமளவில் விண்ணப்பிக்காமல் விடுவதால் என்ன நடக்கலாம் என்பதை முதலில் கூறிவிடுகிறேன்!! தமிழ் மக்கள் அல்லாதவர்கள் கூட பெருமளவில் விண்ணப்பங்களை சமர்ப்பித்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணிகளை பெற்றுக்கொண்டு தங்கள் தொழில்களை.. விவசாயத்தை முன்னெடுத்து காலப்போக்கில் நிரந்தரமாக அந்த பிரதேசங்களில் குடியேறிவிடவும் கூடும்... அப்போது வந்து நின்று குத்துது குடையுது என்று கோசம் போடுவீர்கள்!!

இன்று உங்களுக்கு வாய்ப்புகள் தரப்படுகின்றன. அதை நாம் பயன்படுத்தாமல் விடுவதால் வாய்ப்புகளை இன்னொருவர் பறித்துக்கொள்வார் அல்லது பயன்படுத்திக்கொள்வார்!!

முக்கியமாக முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி பகுதிகளில் அதிகம் அரச காணிகள் இருக்கின்றன. அத்துடன் அரச காடுகளையும் பயன்படுத்திக்கொள்ள மாவட்டங்களுக்கு கடந்த அமைச்சரவை கூட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. காட்டு இலாகாவும் இணைந்து செயற்பட உள்ளது!!

இன்று இந்த வாய்ப்பு தமிழ் இளைஞர்கள் பயன்படுத்தாவிடின் நாளை இதன் விளைவுகள் உங்களுக்கு எதிராகவும் எங்கள் அரசியல் கட்சிகள் இவ்வாறான தேவையான நேரங்களில் அடைகாத்துவிட்டு, பின்னர் மக்களை திரட்டி தங்கள் அரசியலுக்காக கூச்சலிடும் சூழலை மட்டுமே விட்டுவைக்கும்.. 45 வயதுக்கு உட்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்!!

நீங்கள் எந்த தொழில் செய்துகொண்டிருந்தாலும் பரவாயில்லை!! அந்த தொழிலை செய்து கொண்டே இந்த காணியில் புதிய தொழில் முயற்சிகளை தொடங்கலாம்!!

இலகுவாக என்ன செய்யலாம்?? தேக்கு மரக்காடுகளை உருவாக்குங்கள்! இன்று தென்பகுதிகளில் பல நிறுவனங்கள் அதை மிகப்பெரிய இலாபம் ஈட்டும் தொழிலாக செய்கிறார்கள்!!

மிகச்சிறிய முதலிடு!! ஒரு வருடம் கவனமாக பராமரித்துவிட்டு அதன்பின் அவ்வப்போது கவனித்தால் போதும்!!

10 வருடங்களில் மிகப்பெரிய இலாபம் ஈட்டலாம்!! தளபாட உற்பத்தி துறை, மர ஏற்றுமதியில் நிறைய வாய்ப்புகள் உண்டு!

பின்வரும் இடங்களை தெரிவு செய்யுங்கள்!!

மாந்தை கிழக்கு - மாந்தை மேற்கு - வவுனியா வடக்கு ஒட்டிசுட்டான் - நெடுங்கேணி - புதுக்குடியிருப்பு -மாங்குளம் விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டு இன்னும் 5 நாட்களே மீதம் உள்ளன..







# "கடத்தல் காரன்" பட பாடல்களை வெளியிட்டு பாராட்டிய பாரதிராஜா



எப் 3 பிலிம்ஸ் (F3 Films) சார்பில் ஃபிரயா, ஃபெனி, பெலிக்ஸ் (Fraya, Fane, Felix) ஆகியோர் இணைந்து தயாரித்திருக்கும் படம் "கடத்தல் காரன்". எஸ்.குமார் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியிருக்கும் இப்படத்தில் அறிமுக நடிகர் கெவின் ஹீரோவாக நடிக்க, ஹீரோயினாக ரேணு சௌந்தர் அறிமுகமாகிறார். இவருக்கு தமிழில் இதுதான் முதல் படம் என்றாலும், மலையாளத்தில் பல படங்களில் நடித்திருக்கிறார். இயக்குநர் எஸ்.குமாரும் மூன்று மலையாள திரைப்படங்களுக்கு திரைக்கதை எழுதியுள்ளார். ஆக்ஷன் கலந்த காமெடி கலாட்டாவாக உருவாகியுள்ள இப்படத்தில் ருக்மணி பாபு, பாபு ரபீக் உள்ளிட்ட பலர் முக்கிய வேடங்களில் நடித்திருக்கிறார்கள். எஸ்.ஸ்ரீராம் ஒளிப்பதிவு செய்துள்ள இப்படத்திற்கு எல்.வி.கணேஷ் மற்றும் ஜுபின் இசையமைத்திருக்கிறார்கள். ஆர்.சுதர்ஷன் படத்தொகுப்பு செய்திருக்கிறார். மணிபாரதி கலையை நிர்மாணிக்க, ரன் ரவி ஆக்ஷன் காட்சிகளை வடிவமைத்திருக்கிறார். முத்து விஜயன், கௌசல்யன் ஆகியோர் பாடல்கள் எழுத, கூல் ஜெயந்த் நடனம் அமைத்திருக்கிறார்.



இப்படத்தின் பாடல்களை இயக்குநர் பாரதிராஜா வெளியிட்டார். பாடல்களை கேட்டு வெகுவாக பாராட்டிய பாரதிராஜா, கதை சுருக்கத்தை கேட்டு, படம் நேட்டிவிட்டியுடன் தற்போதைய காலக்கட்டத்திற்கு ஏற்ப வித்தியாசமாக இருப்பதாக, பாராட்டினார். திருடுவதை குலத்தொழிலாக வைத்திருக்கும் ஒரு கிராமத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவரின் கட்டுப்பாட்டுக்கு ஊர் மக்கள் அடிபணிந்து வாழ்கிறார்கள். எந்த பொருளை யார் திருடினாலும், அதை சரிசமமாக பங்கிட்டு கொள்ள வேண்டும் மற்றும் வெளியாட்கள் கிராமத்திற்குள் நுழைந்தால், அவர்களால் அந்த கிராமத்தை விட்டு வெளியேற முடியாது. இப்படி பல கட்டுப்பாடுகள் அந்த கிராமத்தில் இருக்கின்றன. அப்படிப்பட்ட கிராமத்தை சேர்ந்த சில திருடர்கள், திருமண வீட்டில் திருடும் போது, ஹீரோயினான மணமகளை தூக்கிச் சென்றுவிடுவதோடு, மணமகளின் நகைகளை பங்கிட்டுக் கொண்டவர்கள், மணமகளை எப்படி பங்கிட்டு கொள்வது என்று யோசிக்க, மணமகனின் காதலரான ஹீரோ மணமகளை, அந்த திருட்டு கிராமத்தில் இருந்து காப்பாற்ற முடிவு செய்து, அந்த கிராமத்தில் மாறு வேடத்தில் நுழைகிறார். ஹீரோயினை காப்பாற்ற தான் ஹீரோ திருட்டு கிராமத்திற்குள் நுழைந்தாலும், அவர் அந்த கிராமத்திற்குள் நுழைந்ததற்கு வேறு ஒரு காரணமும் இருக்கிறது, அது என்ன காரணம் என்பது தான் படத்தின் மிகப்பெரிய ட்விஸ்ட். இப்படி படம் முழுவதும் ரசிகர்கள் எதிர்ப்பார்க்க முடியாத ட்விஸ்ட்டுகள் வருவதோடு, யூகிக்க முடியாத அளவுக்கு திரைக்கதை அமைத்திருக்கிறார் இயக்குநர் எஸ்.குமார்.

இப்படத்தில் ஹீரோவாக நடித்திருக்கும் கெவின் முதல் படம் என்றாலும் ஆக்'ன் மற்றும் கார் சேசிங் காட்சிகளில் எந்தவித டூப் போடாமல் ரியலாக நடித்திருக்கிறார். ஹீரோயின் ரேணு சவுந்தரும் தனது பங்கிற்கு ரசிகர்களை வெகுவாக கவர்வதோடு, இவர்களை தாண்டி மேலும் சில நடிகர்களும் மக்கள் மனதில் நிற்கும் வகையில் நடித்திருக்கிறார்கள், என்று இயக்குநர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். படத்தின் அனைத்து பணிகளும் முடிவடைந்து ரிலீஸுக்கு தயாராகியுள்ள நிலையில், சமீபத்தில் இப்படத்தை பார்த்த இயக்குநரும், விநியோகஸ்தருமான இஸ்மாயில், இப்படத்தின் வெளியீட்டு உரிமையை வாங்கியதோடு, படத்தை இம்மாதம் இறுதியில் வெளியிட முடிவு செய்துள்ளார்.

# கனடிய தேசிய ஊடகங்களில் பணியாற்றும் ஈழத்து தமிழ் இளம் பெண்







கனடாவில் புகழ்பெற்ற தேசிய ஊடகங்களான CTV News . CP 24 News ஆகிய தொலைக்காட்சி நிறுவனங்களில் தற்போது முக்கிய அறிவிப்பாளராகவும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் பணியாற்றும் அபி குகதாசன் அவர்கள் தற்போது கனடாவிலிருந்து ஜனாதிபதித் தேர்தல் ஒளிபரப்புகளுக்காக அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அவர் அங்கிருந்து எமது ஊடகக் குழுமத்திற்கு அனுப்பி வைத்த வீடியோப் பதிவை இங்கே பார்க்கலாம்

அபி குகதாசன் அவர்கள் எமது கனடா உதயன் பத்திரிகையில் தொடர்ந்து பத்தி எழுத்தாளராக இருந்து 5 வருடங்களுக்கு முன்னர் மரணத்தை தழுவிய பூநகரான் குகதாசன் அவர்களது புதல்வி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

# அங்குனகொபெலஸ்ஸ சிறையில் கைதி திடீர் மரணம்!



துஷ்பிரயோக வழக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் அம்பாந்தோட்டை - அங்குனகொபெலஸ்ஸ சிறையில் இன்றுபுதன்கிழமை காலை திடீரென மரணமடைந்துள்ளார்.

சிறுவர் ஒருவரை துஷ்பிரயோகம் செய்ய வழக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 24 வயதுடைய கைதியே இவ்வாறு மரணித்துள்ளார்.

# கொரோனா அச்சம் காரணமாக தென்னிலங்கையில் இருவர் தற்கொலை!

கொரோனா தொற்று அச்சம் காரணமாக இருவேறு இடங்களில் இருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி களுத்துறை - அகலவத்தையை சேர்ந்த (56-வயது) இ.போ.ச பேருந்து சாரதி ஒருவரே இவ்வாறு கடந்த திங்கட்கிழமை தற்கொலை செய்து கொண்டார்.

நாகொடை வைத்தியசாலை ஊழியர்கள் பலரை அவர் ஏற்றிச் சென்ற நிலையில் கொரோனா தொற்றலாம் என்ற அச்சத்தில் இருந்தார் என்று அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

கம்பஹா - ஜாஎலவை சேர்ந்த (72-வயது) பெண் திங்கட்கிழமை தற்கொலை செய்து கொண்டுள்ளார். இவரது மூத்த மகளுக்கும் மருமகனுக்கும் முன்னதாக கொரோனா தொற்று உறுதியாகியிருந்தது. இந்நிலையில் தனிமைப்படுத்தப்பட்ட இவர் கவலையில் இருந்ததாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

# முகநூல் பதிவொன்றினால் தகுந்த பலன்... கோப்பாய் – கைதடி பாலத்தின் பழுது உடன் திருத்தம் செய்யப்பட்டது



கோப்பாய் - கைதடி பாலத்தில் பழுது காணப்படுவதாக முகப்புத்தக பதிவை அடிப்படையாகக் கொண்டு குறித்த பழுது உடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் சீர் செய்யப்பட்டுள்ளமை பல தாபனங்களுக்கும் முன்னுதாரணமாகியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் இளைஞர் ஒருவரினால் கைதடி - கோப்பாய் வீதியில் பலத்தின் தகடுகளில் சற்று வலகல் காணப்படுவதாக பதிவு ஒன்று படத்துடன் இடப்பட்டிருந்தது. அதனை அவதானித்து வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஸ் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ் வலயத்திற்குப் பொறுப்பான நிறைவேற்றுப் பொறியியலாளர் எஸ்.இராதாக்கிருஸ்ணனின் கவனத்திற்கு தொலைபேசியில் கொண்டுவரப்பட்டது. இந்நிலையில் மறுநாளுக்கு இடையில் குறித்த பாலத்தில் காணப்பட்ட விலகல்கள் உலோக ஒட்டுவேலைகள் மேற்கொள்ளப்பட்டு சீர்செய்யப்பட்டதுடன் பின் பிரதேச சபைக்கும் அறியப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, பொறியிலாளரினால் தற்போது காணப்படும் பாலம் உலோகத்தினாலானதாகக் காணப்படுவதனால் அப் பாலத்தில் வேகக் கட்டுப்பாடு அவசியம் எனவும் கூடியது 20 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கவும் சகலருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. வலிகாமம் கிழக்கு பிரதேசத்தின் எல்லைகளில் கடல்நீரேரி பாலங்களே உள்ளன. அவற்றுள் யாழ் பருத்துத்துறை வீதியில் உள்ள வல்வை பாலம், புத்தூர் - மீசாலை வீதியில் உள்ள பாலம், கோப்பாய் கைதடி வீதியில் உள்ள பாலம் போன்றன உலோக பாலங்களாகவும் 10 - 15 வருடத்தினை அடைந்தவையாகவும் உள்ள நிலை யில், பாலங்களுக்கான ஒழுங்குவிதிகளை உயர்ந்தளவில் பின்பற்றி வேகத்தணிப்புடன் வாகனங்கள் செலுத்த கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647) 619-3619

அறிவித்தல்

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம், மாவீரர் தொடர்பான விபரங்களையும், மாவீரர்களது பெற்றோர், சகோதரர்கள் தொடர்பான விபரங்களையும் திரட்டுகின்றது. கனடிய மண்ணுக்கு அண்மைக் காலத்தில் வருகை தந்த மாவீரர்களின் குடும்பத்தினர், தற்போது புதிய முகவரியில் வாழும் மாவீரரின் குடும்பத்தினர், புதிய தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தும் மாவீரர்களது குடும்பத்தினர் அனைவரும் தங்களது முகவரி, தொலைபேசி இலக்கம். போன்ற விபரங்களைத் தந்துதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம். நன்றி. வணக்கம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம். தொடர்பு இலக்கம்: 647 619 3619 ctro@tamilremembrance.com.

# கமலா ஹாரிஸ்: "நம்மவரா–அயலவரா"?

- சிவா பரமேஸ்வரன் - மூத்த செய்தியாளர்

அமெரிக்காவின் துணை அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கமலா ஹாரிஸ் அம்மையாருக்கு வாழ்த்துக்கள். சிறுபான்மையினப் பெண்மணியாக நாட்டின் இரண்டாவது உயர் பதவிக்கு தனது உழைப்பு, தன்னம்பிக்கை, விடாமுயற்சி ஆகியவற்றால் வந்துள்ளார். அடுத்தகட்டமாக அவர் அதிபராக வருவதற்கும் வாய்ப்புள்ளது.

கமலா ஹாரிஸ் அவர்களின் வெற்றியை பல்லினத்தவர்கள் கொண்டாடுகின்றனர். அடிப்படையில் அவர் ஒரு அமெரிக்கர். தான் ஒரு கறுப்பின பெண்மணி என்பதில் தனக்குப் பெருமை என்று வெற்றியுரையில் அவர் கூறியுள்ளார். அந்த வெற்றியுரையில் அவர் தனது தாய் ஷியாமளா கோபாலன் ஹாரிஸுக்கு புகழாரம் சூட்டினார். "தனது வளர்ப்பு மற்றும் முன்னேற்றத்தில் தாய்க்கு பெரும் பங்குள்ளது" என்று கூறிய கமலா ஹாரிஸ் தனது தந்தை குறித்து பெரிதாக எங்கும் குறிப்பிடவில்லை.





ஜமைக்கன் - அமெரிக்கன் பொருளாதாரப் பேராசிரியரான கலாநிதி டொனால்ட் ஹாரிஸ் தற்போது ஜமைக்காவின் ப்ரவுண்ஸ் டவுனில் வசிக்கிறார். அவரது வெற்றியை ஜமைக்கா நாட்டு மக்களும் கொண்டாடி மகிழ்ந்தனர். ஜமைக்கா வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ் அமெரிக்காவின் துணை அதிபராகத் தெரிவாகியுள்ளது நாட்டுக்கே பெருமை என்று ஜமைக்காவின் பிரதமர் ஆண்ட்ரூ ஹொல்னெஸ் டிவிட்டரின் வாழ்த்தியுள்ளார்.

அவரது வெற்றி சரித்திர சாதனை, உலகெங்கும் உள்ள பெண்களின் வெற்றியாகும் என்று ஜமைக்காவின் பிரதமர் ஆண்ட்ரூ ஹொல்னெஸ் மற்றொரு ட்வீட்டில் கூறியுள்ளார்.

ஜமைக்காவைச் சேர்ந்தவரும் பன்னாட்டு மனித உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் சட்டத்தரணியும் உள்ளூர் வானொலியில் தொகுப்பாளராகவும் இருக்கும் ஜோடி-ஆன் க்வாரி சுருக்கமாக வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று ஒரு விஷயத்தைப் போட்டு உடைத்துள்ளார். அவரது டிவீட்டைப் பார்ப்பவர்களுக்கு அவர் சொல்வது புரியும்.

சிறிய நாடான ஜமைக்காவில் இருக்கும் மக்களுக்கு இருக்கும் புரிதல் கூட இந்தியாவில்-குறிப்பாகத் தமிழகத்தில் இல்லை என்பது வருத்தம் மட்டுமல்ல வியப்பையும் ஏற்படுத்துகிறது.




அந்த ட்வீட்டில் அவர் கூறியிருக்கும் ஒரே விஷயம் "அம்மையார் அமெரிக்கர்" என்பதே. அதுவே யதார்த்தம். அவரது வெற்றி உரையைக் கூர்ந்து கவனித்தவர்களுக்கு அது தெரிந்திருக்கும். அமெரிக்கரான அவர் அதில் பெருமைப்படுவது மிகவும் சரியானது.

ஆனால் இந்தியா மற்றும் இலங்கையில் அவர் "நம்மவர்" என்று கூறி ஏராளமானோர் சுய விளம்பரம் தேடினர். இனவுணர்வும் மொழியுணர்வும் இயற்கையானது என்றாலும் அதை நடைமுறைக்கு ஒவ்வாத வகையில் யதார்த்தத்துக்கு மாறுபட்டு நடந்துகொள்வது நகைப்புக்கு இடமளிக்கிறது.

இந்தியாவின் பல பகுதிகளில் அவரும் ஜோ பைடனும் வெற்றிபெற வேண்டும் என அவர்களது ஆதரவாளர்கள், நலம் விரும்பிகள், ரசிகர்கள் என பல்தரப்பினர் சிறப்புப் பூசைகள், பிரார்த்தனைகள் போன்றவற்றை முன்னெடுத்தனர். அதே சமயம் அவர்களை எதிர்த்துப் போட்டியிட்ட டிரம்ப்பும் அவரது கூட்டாளி மைக் பெண்சும் வெற்றிபெற வேண்டும் எனவும் அதேபோன்ற முன்னெடுப்புகள் செய்யப்பட்டன.

இதில் இன்னும் உச்சகட்ட கிறுக்குத்தனம் இவை அமெரிக்காவிலும் நடைபெற்றன என்பதே. தேர்தல் முடிவுகள் கொள்கை அடிப்படை, தனி நபரின் ஆளுமை, மக்கள் பணி போன்ற வி'யங்களைச் சார்ந்தே அமையுமே தவிர பூசை, யாகம் போன்றவற்றின் அடிப்படையில் அமைவதில்லை.



தமிழகத்தின் திருவாரூர் மாவட்டத்திலுள்ள துளசேந்திரபுரம் அவரது தந்தையின் பூர்வீக கிராமம் என்று கூறப்படுகிறது. அந்தக் கிராமத்துக்கு அருகிலுள்ள பைங்காடு அக்ரஹரத்தில் அவர்களில் முன்னோர்கள் வாழ்ந்தனர் என்று கூறி உள்ளூர் மக்கள் புளகாங்கிதம் அடைந்தனர். யதார்த்த ரீதியில் அமெரிக்கத் தேர்தலுக்கும் இந்த மக்களுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. தேர்தல் முடிந்த பிறகு இந்த கிராமம் நியூ யார்க்காகவோ, வாஷிங்டனாகவோ, கலி்ஃபோர்ணியாகவோ மாறிவிடப் போவதில்லை.

ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம். மேலேயுள்ள படத்துக்கு விளக்கம் தேவையில்லை. இதே துளசேந்திரபுரத்து மக்கள் அமெரிக்கா செல்ல வேண்டுமென்றாலும் உரிய நடைமுறைகளை கடைப்பிடித்து, விசா பெற்று பாதுகாப்புச் சோதனைகளைக் கடந்துதான் செல்ல முடியுமே தவிர, எங்கள் ஊரைப் பூர்வீகமாகக் கொண்ட அம்மையார் இப்போது துணை அதிபர், எனவே நாங்கள் நினைத்த நேரத்தில் அமெரிக்கா வந்து அவரை சந்தித்து தமிழில் உரையாடி, ஊருக்கு வேண்டியதைச் செய்யுமாறு கோர முடியும் என்று கூற முடியுமா?




ஆனால் அவர்களை விட உள்ளூர் ஊடகங்கள் காட்டிய செயற்கையான அக்கரையும், செய்தி சேகரிப்பதற்காக வலிந்து செய்த சில வேலைகளும் ஊடகவியலாளனான என்னை உறுத்தியது. இவர்களின் செய்கையைப் பார்த்து மக்கள் சிரித்தனர் என்பதே உண்மை. உலகளவிலான "பிரேக்கிங் நியூஸ்" போலவும் பிபிசி உட்பட பல ஊடகங்கள் அங்கு சென்று "களத்திலிருந்து செய்திகள்" வெளியிட்டன. அப்படி அங்கு என்ன நடந்தது? அன்றாடம் அங்குள்ள கோவிலில் நடைபெறும் பூசை போல செய்தியாளர்கள் சென்ற அன்றும் பூசை நடைபெற்றது. ஓரிரு வீட்டின் வாசலில் வண்ணக் கோலங்கள் போடப்பட்டன--அவ்வளவே. தொலைக்காட்சியில் பார்ப்பதற்கு ஏதுவாக செய்தி சேகரிக்கச் சென்றவர்களே அதற்கான முதலீட்டைச் செய்தது ஊடக தர்மத்தைக் கேள்விக் குறியாக்கியது.



இதுவாவது பரவாயில்லை. உடனே ஈழத் தமிழர்களும் தமது பங்குக்கு வரிந்துகட்டிக் கொண்டு அவர் "எம்மவர்" என்பதைக் கூறி களத்தில் இறங்கினர். அவரின் பூர்வீகம் யாழ்ப்பாணம் மானிப்பாய் என்றும் இல்லையில்லை மட்டக்களப்பு என்றும் சமூக ஊடகங்களில் தமது பெருமையை பறைசாற்றி புளகாங்கிதம் அடைந்தனர்.

உலகின் வல்லரசான அமெரிக்காவின் துணை அதிபராக தனது உழைப்பு, பேச்சுத் திறமை, சமூகப் பங்களிப்பு, தன்னம்பிக்கை, தன்னை தைரியமாக கலப்பின அமெரிக்கர் என்று கூறிக் கொள்ளும் தைரியம் போன்ற பல காரணிகளால் கமலா தேவி ஹாரிஸ் இன்று அந்நாட்டின் துணை அதிபராகத் தேர்வாகியுள்ளார்.



எனவே அவரை "எம்மவர், நம்மவர்" என்றெல்லாம் கூறி சுயமகிழ்ச்சியும் உள்ளூரில் சுயவிளம்பரமும் செய்து கொள்ளலாமே தவிர வேறு ஒன்றும் ஆகப்போவதில்லை.

உலகின் பல நாடுகளுக்கு பயணித்துள்ளவன் என்கிற வகையில் இந்த "நம்மவர், எம்மவர்" எல்லாம் விமான நிலையத்தின் குடிவரவுப் பகுதியில் எப்படி நடந்து கொள்வார்கள் எனப் பார்த்துள்ளேன். அங்கு நாங்கள் இலங்கையர், இந்தியர் என்றெல்லாம் கூறுவதில்லை, "வீ ஆர் பிரிட்டிஷ், அமெரிக்கன் பாஸ்போர்ட்" என்று கூறி அதற்கான வரிசையில் போய் நின்று கொள்வர். அதேபோலத்தானுள்ளது இவர்கள் அவரை சொந்தம் கொண்டாடுவதும்.

அவரது வெற்றி பல பரிமாணங்களைக் கொண்டது. அமெரிக்காவின் முதல் பெண், முதலாவது கருப்பின மற்றும் முதலாவது தெற்காசியப் பூர்வீக பெண்மணியாக குடியரசின் துணை அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது அமெரிக்காவின் பன்முகத் தன்மையைக் காட்டுகிறது. அமெரிக்க அரசியலில் புதிய பாதையைத் தோற்றுவித்துள்ளது.

கலி்ஃபோர்ணியா செனட்டரான அவரின் வெற்றி பல லட்சம் பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அமெரிக்காவின் 200க்கும் மேற்பட்ட அண்டுகளின் சரித்திரத்தில் பெண்கள் புறந்தள்ளப்பட்டு, தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு அவர்களுக்கான உரிய இடம் அளிக்கப்படாத நிலையை கமலா ஹாரிஸின் வெற்றி மாற்றியமைத்துள்ளது. இதை அவரே தனது வெற்றியுரையில் சுட்டிக்காட்டினார். "இது ஒரு தொடக்கமேயன்றி முடிவல்ல, இனிவரும் காலங்களில் அமெரிக்க அரசியல், சமூகப் பொருளாதார உலகின் பெண்களின் பங்கு மேலும் மேலும் அதிகரிக்கும்" என்று அவர் கூறியுள்ளது முற்றிலும் உண்மை.

அம்மையாரின் வெற்றிக்கு அவரது கணவரின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. முன்னணி சட்டத்தரணியான அவர் கமலாவின் அரசியல் அபிலாஷைக்கு உறுதுணையாக இருந்துள்ளார். ஏற்கனவே திருமணமாகி இரண்டு பெண்களுக்குத் தந்தையான டக் எம்ஹா்ஃபை கமலா ஹாரிஸ் ஐந்தாண்டுகளுக்கு முன்னர் திருமணம் செய்து கொண்டார். டக் எம்ஹா்ஃபின் இரு பெண்களையும் தமது பெண்களாகவே பாவித்து அவர்களை இவர் அணைத்துச் செல்வது அமெரிக்க பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.





தாய் வழியில் இந்துவாகவும், தந்தை வழியில் கிறிஸ்தவராகவும் உள்ள அவர் தற்போது யூத மதத்தைச் சேர்ந்தவரைத் தனது கணவராக ஏற்றுள்ளார். மதங்களைக் கடந்த அவரது பார்வையும் நடவடிக்கையும் கூட அமெரிக்க மக்களிடையே அவருக்கு நல்லதோர் அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்துள்ளது.


அமெரிக்காவில் துணை அதிபர் பதவி என்பது பெரும்பாலும் சம்பிரதாய ரீதியான பதவி என்றாலும், இது அவருக்கு அடுத்த அதிபராக வரக் கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அப்படி அவர் அதிபராக வந்தால் அது மிகப்பெரும் சாதனையாகவும் இருக்கும். எனினும் அவரை "நம்மவர், எம்மவர்" என்று கூறுகின்றவர்கள் ஒன்றை மனதில் வைக்க வேண்டும். அவர் இந்தியாவுக்கோ, இலங்கைக்கோ துணை அதிபர் இல்லை. அவர் அமெரிக்கர், அமெரிக்காவின் துணை அதிபர். அவரது கொள்கை ரீதியான நிலைப்பாடுகள் அமெரிக்க அரசின் நலன் சார்ந்தே இருக்கும். அப்படித்தான் அது இருக்கவும் வேண்டும்.

இங்குள்ளவர்கள், அவரது ஆட்சிக் காலத்தில் காஷ்மீர் விஷயத்தில் இந்தியாவுக்குச் சார்பாக நடந்து கொள்வார், தமிழகத்தை மற்றொரு அமெரிக்காவாக மாற்ற உதவுவார், ஈழத்தைப் பெற்றுத் தருவார் என்று கருதுவதெல்லாம் கனவுலகில் பறப்பது போலத்தான். இந்தியா இலங்கை போன்றவை ஜமைக்கா மற்றும் அதன் மக்களிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். கமலா அம்மையாரின் தந்தை தற்போதும் ஜமைக்காவில் வசித்தாலும், அவரைச் சந்தித்து கட்டியணைத்து வாழ்த்துக் கூறவோ, அல்லது ஊடகங்கள் வரிசைகட்டி அவரிடம் பேட்டி எடுக்கவோ இல்லை.

ஜமைக்காவின் பிரதமர் தனது ட்வீட்டில் கூட "வரும் நாட்களில் அமெரிக்கா-ஜமைக்கா உறவுகள் மேலும் மேம்படும் என்று நம்புகிறேன்" என்று மிகச் சுருக்கமாக யதார்த்தத்தை வெளியிட்டார். இந்தியாவின் முன்னணி தொழிலதிபர்களில் ஒருவரான ஆனந்த் மஹிந்த்ராவின் டிவீட் அவரது வெற்றியைச் சிறப்பாக வர்ணிக்கிறது. அமெரிக்க அதிபராகவும் துணை அதிபராகவும் பொறுப்பேற்கவுள்ள ஜோ பைடன் மற்றும் கமலா ஹாரிஸுக்கு மீண்டும் நல்வாழ்த்துக்கள்.


Let Our Family Take Care of Yours
JAMUNA HOME CARE
Home Is Where The Heart Is
We Providing Respite Care for You or Your Loved One!
Call Us Today For More Information!
Cell: 647-512-9820
647-868-2440
Home: 647-367-0045
Email: jamuna05ch@gmail.com
JAMUNA HOME CARE
85 Merryfield Drive, M1p 1k3, Scarborough


Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location :
Unit 9- 40 Winges Road
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Drive, Markham,
Ontario L3S 3N6
Office Number 905-554-5606
Fax Number 905-554-3236
Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993


20/20 CA$H RU$$H
Western Union- Money Transfer, Payout, Bill Payments
Buying Used Gold-Top Dollar paid
Pawning
Small Loans
Cheque Cashing rate of 3%
நகைகள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்
இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கங்களை கொண்ட வாடிக்கையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அடவுகளை மீட்கவும்.
Kindly redeem the following pawn ticket number immediately
CR209, 0316, Cr#274, 0308, 1546, 1593, CR266, CR282, Cr 283
Covid protocols in place. Please wear a face mask and maintain physical distancing. Thank you.
இலங்கையில் உள்ள உங்கள் உறவுகளுடன் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கான Pre-paid Top up ஐ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு :
Tel : 416-291-CASH (2274)
Fax : 416-291-2276
E-mail : 2020cashrusshcorp@gmail.com | www.2020cashrussh.ca
4049 Sheppard Ave., East Scarborough. ON. M1S 1S8




***நீங்கள் கனடாவுக்கு வந்த 5 ஆண்டுகளுக்குள் புதிய குடிவரவாளர்களுக்கான எமது தீபாவளி சலுகைகளைப் பெறலாம்***

*முதல் 3 ஆண்டுகளுக்கு உங்கள் வங்கிக் கணக்குக்கு நிரந்தர வங்கி கட்டணம் இல்லை*

*புதிய வாடிக்கையார்களுக்கான எங்களின் சலுகையின் மூலம்* **$650** *வரை சேமியுங்கள்**

*தெரிவு செய்யப்பட்ட வங்கிகளில் உள்ள எங்கள் மொழி ஆலோசர்கள் உரையாடுவார்கள் அல்லது புதிய வாடிக்கையாளர்களுக்கான எங்கள் சலுகைகளை இணையத்தில் தேடுங்கள்*


*உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க நாங்கள் இருக்கின்றோம்*

**nbc.ca**/tamil

*Our banking offer for newcomers is available to immigrants who have been living in Canada for less than 5 years. Savings of $650 over three years based on: no flat monthly fee for our banking package for three years ($14.95/month), first order of cheques free ($56.98/order) and small safety deposit box rent-free for the first year ($55.00/year).To enjoy the full savings, you must sign up for specific additional products and services, keep them and carry out all required transactions for a minimum of 36 months. Some conditions apply.

# மேற்குலக நாடுகளில் சைவ சமயத்தை காப்பதில் கரிசனை கொண்டு செயற்பட்ட சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்

**ஐ.நாவினால் சமாதான விருது பெற்றவரும், யாழ் சிவயோக சுவாமிகளின் சீடனுமான அமெரிக்க நாட்டின் சைவப் பெரியார் தவத்திரு சிவாயசுப்பிரமுனிய சுவாமிகள் அவர்களது குருபூசை தினம் இன்று (13.11.2020)**



யாழ்ப்பாணக் குடாநாடு சித்தர்கள், ஞானிகள், யோகியர் என்ற வகையில் ஒரு ஞானபரம்பரையை தோற்றுவித்த பெருமைக்குரியது. இந்த ஞானபரம்பரையில் ஒருவராக தோற்றம் பெற்றவர்தான் தவத்திரு சிவயோகசுவாமிகள். இவர் யாழ்ப்பாணத்து மாமுனிவர் என அடியார்களால் போற்றப்பட்டு வந்தவர். இவரது சமாதிக் கோயிலும் ஆச்சிரமும் யாழ்.கொழும்புத்துறை கிராமத்தில் அமைந்திருப்பதுடன், அங்கு இன்றும் பூசைவழிபாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஒரு சீடர் பரம்பரையை உருவாக்கிய பெருமை சிவயோக சுவாமிகளுக்கு உண்டு. இவரது அருள் பெற்ற ஞானியர் பரம்பரையில் உள்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, மேலைநாடுகளைச் சேர்ந்த பிற இனத்தவர்களும் அடங்குகிறார்கள். இவர்களுள் ஒருவராக சிறப்பித்துச் சொல்லப்படுபவர்தான் அமெரிக்காவைச் சேர்ந்த தவத்திரு சிவாயசுப்பிரமுனிய சுவாமிகள்.

சிவயோக சுவாமிகளின் மகிமையை கேள்வியுற்ற இருபத்தியொரு வயது அமெரிக்க இளைஞர் ஒருவர் 1949ஆம் ஆண்டு இலங்கை வந்திருந்தார். யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அந்த அமெரிக்க இளைஞர், வைகாசி விசாக நன்னாளன்று சிவயோக சுவாமிகளை சந்தித்தார். மக்களோடு மக்களாக சாதாரண நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் ஒருசிலர் இறைவனால் ஆட்கொள்ளப்படுவதால், இறையுணர்வு கைவரப் பெற்ற அனுபூதிமான்களாக மாறி விடுகிறார்கள்.

இந்த வகையிலேயே அந்த அமெரிக்க இளைஞரும் சிவயோகசுவாமிகளின் சந்திப்புக்குப் பின் இறைபக்குவ நிலை பெற்று அவரது சீடரானார். சிவயோக சுவாமிகள் மேற்படி அமெரிக்க இளைஞருடனான முதலாவது சந்திப்பின் போது பஞ்சாட்சரமந்திரத்தை உபதேசம் செய்து, வாழ்வின் பணிகள் குறித்து அறிவுரைகளையும் வழங்கி, 'சுப்பிரமுனிய' எனும் நாமாகரண தீட்சையையும் கொடுத்தது மட்டுமல்ல, இளைஞரின் முதுகில் பலமாக ஓங்கி அடித்து, 'இந்த அடி அமெரிக்காவிலே கேட்கும்! இனி உலகெங்கும் சென்று சிங்கம் போல் கர்ச்சிப்பாய்! நீ பல ஆலயங்களை அமைத்து பலருக்கு உணவளிப்பாய்!' என ஆசி வழங்கி அனுப்பி வைத்தார். அன்று முதலாக அந்த அமெரிக்க இளைஞர் சுப்பிரமுனிய சுவாமிகள் என அடியார்களால் அழைக்கப்பட்டு போற்றப்பட்டார்.

சுப்பிரமுனிய சுவாமிகள் சில காலம் யாழ்.குடாநாட்டில் தங்கியிருந்த போது, சிவயோக சுவாமிகளின் ஆசியுடன்,அளவெட்டி கிராமத்தில் ஆச்சிரமமொன்றையும், பசுபதீஸ்வரர் ஆலயத்தையும் ஸ்தாபித்தார். இன்று உலகளாவிய ரீதியில் சேவையாற்றி வரும் சைவசித்தாந்த தர்மசபை அளவெட்டி சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில்தான் ஆரம்பமாகியிருப்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இலங்கையிலிருந்து அமெரிக்கா திரும்பிய சுப்பிரமுனிய சுவாமிகள், அங்கு செய்ய வேண்டிய ஆன்மீக பணிகளுக்கு தன்னை ஆயத்தமாக்கும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டார். 1957ஆம் ஆண்டு அமெரிக்காவின் கலிபோர்னியா நகரில் இமாலய கலாபீடத்தை நிறுவியதுடன், மேலைத்தேசத்தின் முதலாவது இந்துக் கோவிலையும் ஸ்தாபித்தார். 1970ஆம் ஆண்டு,அமெரிக்காவின் ஹவாய் தீவுகளில் ஒன்றான குவை எனும் தீவில் புனித வைலுவ நதிக்கரையிலுள்ள பெரும் நிலப்பரப்பில் சைவ ஆதீனத்தை நிறுவினார். இங்கு ஆறு அடி உயரமான நடராஜப் பெருமானை மூலமூர்த்தியாகக் கொண்ட ஆலயத்தையும் அமைத்தார்.

1975ஆம் ஆண்டு மாசி மாதம் சிவபெருமான் சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு ஓர் அகக்காட்சியை அருளினார். இதன்படி புனித வைலுவ நதிக்கரையில் சுயம்புலிங்கமொன்றைக் கண்டார். இதனை மையமாகக் கொண்டே சன்மார்க்க இறைவன் கோவிலை முற்றிலும் கருங்கற்களைக் கொண்டு உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை சுவாமிகள் மேற்கொண்டார். அதற்கான பணிகள் இடம்பெற்று வரும் வேளையில், 1987ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் இங்கு பிரதி'டை செய்வதற்காக ஆறு கோணங்கள் கொண்டதும், 39 அங்குல உயரமானதுமான ஸ்படிக லிங்கமொன்றும் சுவாமிகளுக்கு கிடைத்தது. ஆலயம் அமைக்கப்பட்டு வரும் வளாகத்தில், நூற்றெட்டு வில்வ மரங்களுக்கு மத்தியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சுயம்புலிங்கேஸ்வரருக்கு நித்திய பூசைகள் இடம்பெற்று வருகின்றன.

சுப்பிரமுனிய சுவாமிகள் 1979ஆம் ஆண்டு 'ஹின்ருசியம் ருடே' என்ற பெயரிலான சஞ்சிகையொன்றை ஆரம்பித்து வைத்தார். ஹவாய் சைவஆதீன வெளியீடான இந்த சஞ்சிகை சர்வதேச ரீதியில் இந்துக்களின் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. இந்து சமயம் சார்ந்த பல நூல்களையும் சுவாமிகள் எழுதியிருக்கிறார்.

சுப்பிரமுனிய சுவாமிகள் பல தடவைகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளார். இவர் 1982 ஆம் ஆண்டு இங்கு வந்த போது,கோப்பாய் கிராமத்தில் சுப்பிரமுனிய கோட்டத்தை ஸ்தாபித்தார். மீண்டும் 1983ஆம் ஆண்டு இலங்கை வந்த போது,கோப்பாய் கிராமத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சாந்திலிங்கேஸ்வரப் பெருமானை தனது திருக்கரங்களால் பிரதி'டை செய்து வைத்தார். 1983ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் பின் சுவாமிகள் இலங்கைத் தமிழ் அகதிகள் நிவாரண நிதியமொன்றை ஆரம்பித்து, அதனூடாக ஏராளமான பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கியிருப்பதையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

சுப்பிரமுனிய சுவாமிகள் தனது சமய,சமூகநலப் பணிகளின் மற்றொரு செயற்பாடாக இந்துகலாசார அறக்கட்டளையை உருவாக்கி, அதனூடாக உலகளாவிய ரீதியில் ஆதரவற்றோர் மற்றும் முதியோருக்கான இல்லங்கள், சமய நிறுவனங்கள் போன்றவற்றுக்கு உதவி வந்துள்ளார். இந்த அறக்கட்டளை ஊடான மேலான பணிகள் ஹவாய் சைவஆதீனத்தால் இப்போதும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1986ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற உலக சமய பாராளுமன்ற நிகழ்வின் போது, சுவாமிகளது உலகளாவிய சமய சமூகப் பணிகளை பாராட்டி 'ஜகதாச்சாரியார்' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 2000ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் யூதாண்ட்(முன்னாள் செயலாளர் நாயகம்) ஞாபகார்த்த சமாதான விருது வழங்கப்பட்டதுடன், ஐக்கிய நாடுகள் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற உலக சமாதான மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுவதற்கும் சுவாமிகளுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

சுப்பிரமுனிய சுவாமிகள் 2001 ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் திகதியன்று நள்ளிரவு சித்திரை நட்சத்திரத்தில் மகாசமாதியடைந்தார். இன்று(13.11.2020) சுவாமிகளது குருபூசை தினமாகும்.



# COVID-19க்கான தீர்வு **தெளிவானது**

- முக மறைப்பொன்றை அணியுங்கள்
- உங்களின் வீட்டில் இல்லாதவர்களுடன் 2 மீ இடைவெளியைப் பேணுங்கள்
- உங்கள் வீட்டு அங்கத்தவர்களை மட்டும் உங்களின் நெருங்கிய தொடர்பில் வைத்திருங்கள்
- அடிக்கடி உங்கள் கைகளைக் கழுவுங்கள்



**பரவலைத் தடுத்தல் உங்களில் ஆரம்பிக்கிறது**
மேலும் அறிவதற்கு ontario.ca/coronavirus ஐப் பார்வையிடுங்கள்.

ஒன்ராறிரோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario




## கனடாவில் மாவீரர் நாள் 2020 வணக்க நிகழ்வுகள்






# RLCP Regional Learning Choices Programs

peel District School Board

Regional Learning Choices Programs (RLCP) offered by the Peel District School Board empower students by providing them with opportunities to develop and explore skills in a particular area of interest. The Peel board offers 11 different Regional Learning Choices Programs to secondary students, starting in grade 9, from across Brampton, Mississauga and Caledon.

- Advanced Placement
- Arts
- Graphic and Design Management
- International Baccalaureate
- International Business and Technology
- International and Executive Leadership Academy
- Regional Skilled Trades
- Regional Sports
- SciTech
- Strings
- Transportation Engineering and Technology

*Grade 8 students – apply now*

**Applications for secondary regional programs the 2021-22 school year are open from Nov. 9, 2020 at 8:30 a.m. to Nov. 23, 2020 at 3 p.m. To learn about each regional program, the schools they're offered at and to apply, visit www.peelschools.org/regionalprograms**



Amma Brand
இப்பொழுது கனடாவிலும் கிடைக்கின்றது!
Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
NOW IN CANADA
100% Natural
Amma Apple Cider with Mother Vinegar
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471
Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
நல்லெண்ணெய்
750ml
375ml
Amma Herbal
Juices
NOW IN CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Super Energizer
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice with Aloe Vera
Aloe Noni with Aloevera Juice
100% HERBAL
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471

# பெண் பிள்ளைகளுக்கு சொத்தில் பங்கு கொடுக்க விரும்பிய தாயைக் கொடூர கொலை செய்த மகன்கள் வெறிச்செயல்



பெற்றோரின் சொத்தில் பெண்பிள்ளைகளுக்கும் பங்கு உண்டு என்று, தமிழ்நாட்டில் 1989 முதல் சட்டம் உள்ளது. இதேபோன்று, இந்தியா முழுவதும் மகளிருக்கு பெற்றோர் சொத்தில் உரிமை உண்டு என்ற வரலாற்றுச்சிறப்பு மிக்க தீர்ப்பை சமீபத்தில் உச்சநீதிமன்றம் வழங்கியது.

சட்டம் இப்படி இருக்கையில், உடன் பிறந்த சகோதரிகளுக்கு சொத்தில் பங்கு கொடுக்க மறுத்த இரு சகோதரர்கள், பெண்பிள்ளைகளுக்கு ஆதரவாக நின்ற பெற்ற தாயையே கொடூரமாக வெட்டிக்கொன்று விட்டனர்.

மதுரைக்கு அருகே நடந்த இந்த கொடிய சம்பவம் பற்றிய விவரம் பின்வருமாறு:

மதுரை மாவட்டம் திருமங்கலத்தை அடுத்த சொக்கநாதன்பட்டியைச் சேர்ந்தவர், முத்துக்கருப்பன். இவருடைய மனைவி பாப்பம்மாள் (வயது 75). இந்த முதிய தம்பதிக்கு 2 மகன்களும், 2 மகள்களும் உள்ளனர்.

முத்துக்கருப்பன் - பாப்பம்மாள் தம்பதிக்கு சொக்கநாதன் பட்டியில் இரண்டரை ஏக்கர் நிலங்கள் உள்ளன. இவற்றை தங்கள் பெயரில் மாற்றித்தருமாறு, மகன்கள் பொன்ராம், கண்ணன் ஆகிய இருவரும் கேட்டு வந்தனர்.

ஆனால், பாப்பம்மாளோ, திருமணமாகி கணவனைப்பிரிந்து தன்னுடனே வந்து இருக்கும் தன் மகள்கள் ஜெயமணி, சாந்தி ஆகியோருக்கும் சொத்தில் பங்கு உண்டு. அந்த பங்கை அவர்களுக்கு விட்டுக்கொடுக்க ஒப்புக்கொண்டால், சொத்தை பிரிக்கலாம் இல்லாவிட்டால் அதற்கு உடன்பட மாட்டேன் என கூறி விட்டார்.

கண்ணனும், பொன்ராமும் இதற்கு உடன்படாமல் வாக்குவாதம் செய்தனர். அவர்களுக்குத்தான் திருமணத்தின்போது நகைகள் போட்டு சீர்வரிசை கொடுத்தோமே, இப்போது சொத்திலும் பங்கு கொடுக்கவேண்டுமா என்று கேட்டு தகராறில் ஈடுபட்டனர்.

இதைத்தொடர்ந்து, சொத்து பிரச்சினை காவல் நிலையத்திற்கு வந்தது. திருமங்கலம் போலீசார் கடந்த 3 தினங்களுக்கு முன், முத்துக்கருப்பன், அவருடைய மனைவி பாப்பம்மாள், மகன்கள் ஆகிய அனைவரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி, இரு தரப்பையும் சமாதானம் செய்தனர். பாப்பம்மாள் இறப்புக்குப் பிறகு சொத்துகளை சமமாகப் பங்கிட்டுக் கொள்ளவேண்டும் என சம்பந்தப்பட்டவர்களிடம் எழுதி வாங்கப்பட்டது.

ஆனால், போலீசிடம் ஒப்புக்கொண்ட கண்ணனும், பொன்ராமும் சகோதரிகளுக்கு சொத்தில் பங்கு கொடுக்கும் மனநிலையில் இல்லை.

மறுநாள், பாப்பம்மாள் வீட்டிற்குச் சென்ற கண்ணன், அவருடைய மகன் சிவராஜ், பொன்ராம், அவருடைய மகன்கள் ரகு, கணேஷ்குமார் ஆகியோர், அவரிடம் மீண்டும் தகராறு செய்தனர். தங்கள் பெயரில் சொத்தை எழுதித்தருமாறு பிடிவாதம் செய்தனர். பாப்பம்மாள் முடியவே முடியாது என்று மறுத்தார்.

விவகாரம் முற்றியதால் தந்தை முத்துக்கருப்பன் தலையிட்டு மகன்களையும், பேரன்களையும் சமரசம் செய்ய முயன்றார். ஆனால் அவரைப் பிடித்து வெளியே தள்ளிய மகன்களும், பேரன்களும் கத்தி, அரிவாள் போன்ற ஆயுதங்களை எடுத்து பாப்பம்மாளை சரமாரியாக வெட்டினர். அவருடைய கழுத்து, கை, கால் உள்பட பத்துக்கும் மேற்பட்ட பாகங்களில் வெட்டு விழுந்தது.

அதோடு, பாப்பாம்மாளின் இடது காலும் துண்டானது. ரத்த வெள்ளத்தில் துடிதுடித்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த கொடூரத்தாக்குதலின்போது வீட்டில் இருந்த சகோதரிகளாலும் ஒன்றும் செய்யமுடியவில்லை. தங்கள் கண்முன்னே தாய் வெட்டப்படுவது கண்ட இரண்டு மகள்களும் அலறியடித்து வெளியில் ஓடி கூச்சல் போட்டு உதவிக்கு ஆட்களை அழைத்தனர். அவர்களது அலறல் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் ஓடி வருவதற்குள் எல்லாம் முடிந்து விட்டது. எனவே, திருமங்கலம் நகர் போலீஸ் நிலையத்திற்கு தகவல் அளித்தனர். துணை காவல் கண்காணிப்பாளர் வினோதினி தலைமையில் போலீசார் விரைந்து வந்து விசாரணை மேற்கொண்டனர்.



கணேஷ்குமார். ரகுராமன். பொன்ராம்.

போலீஸ் வருவதற்குள், கொலை வெறி பிடித்த பிள்ளைகள் தப்பி ஓடி விட்டனர். போலீசார் தீவிர வேட்டை நடத்தி, ஊருக்குள் பதுங்கியிருந்த கண்ணனை முதலில் கைது செய்தனர்.

பிறகு, பொன்ராம், அவருடைய மகன்கள் கணே‘ குமார், ரகுராம் ஆகியோரும் பிடிபட்டனர். 4 பேரிடமும் தீவிர விசாரணை நடக்கிறது. கண்ணனின் மகன் சிவராஜ் தலைமறைவாக உள்ளார். அவரை போலீசார் தீவிரமாகத்தேடி வருகிறார்கள்.

**மணிராஜ்,**
**திருநெல்வேலி.**



# Carefirst Family Health Team

## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!

- Twelve Oaks Towns — GreenCity Development Group Inc.
- Ivylea Towns — Marlin Spring Development and Greybrook Realty Partners
- King East Estates — Plazacorp Urban Residential Communities
- High Point Urban Towns — Laurier Homes
- Horizons Modern Towns — Chestnut Hill Developments
- Station 3 Condos — Brookfield Residential
- The BoatWorks Towns — Andrin Homes
- Landing Condos Whitby Harbour — Cortara Private Equities
- JAC Condos — Graywood Developments Ltd. and Phantom Developments
- 181 East Condos — Stafford Homes Ltd. and Greybrook Realty Partners
- Daniels Keelesdale Condos and Towns — The Daniels Corporation
- Empire Quay House Condos — Empire Communities
- 199 Church Condos — CentreCourt Developments Inc. and Parallax Development Corp. Church St & Dundas St E, Toronto. $537,990 - $1,018,990 | 355 sq ft - 860 sq ft. VIP Sale NOW on
- Axess Condos — Liberty Hamlets and Fieldgate Construction
- Universal City Condos 4 — Chestnut Hill Developments
- Bartley Towns — Batis Inc
- Artsy Condos — The Daniels Corporation
- Field House Towns — The Daniels Corporation
- 28 Eastern Condos — Alterra Group
- Wonderly Park Towns — Kaleido Corporation
- Maxx Urban Towns 2 — VanMar Developments



**Bala Logendralingam**
REALTOR®

EXECUTIVE Award — 100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

# நாகர்கள் விஜயன் வருகைக்கு முன்னரே இலங்கையின் வடக்கையும் தெற்கையும் அரசாட்சி செய்துள்ளனர்!

மகாவம்சம் இலங்கைக்குப் புத்தர் மும்முறை வருகை தந்ததாக அதன் முதல் அத்தியாயத்தில் குறிப்பிடுகிறது. அதாவது விஜயனது வருகைக்கு முன்னரே புத்தர் இலங்கைக்கு வந்தார் என மகாவம்சம் சொல்கிறது.

விஜயன் கிமு 483 ஆண்டில் இலங்கையில் கரையொதுங்கியதாகச் சொல்லப்படுகிறது. அந்த நாள்தான் புத்தர் நிர்வாணம் அடைந்த நாளாகும். விஜயனையும் அவனது சந்ததியினரையும் தங்கள் மூதாதையர் எனக் கொண்டாடும் சிங்களவர்கள் இலங்கையின் வரலாறு விஜயனது வருகையோடுதான் தொடங்கியதாக சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் சொல்கிறார்கள். ஆனால் மகாவம்சத்தின் முதலாவது அத்தியாயத்தில் விஜயனது வருகைக்கு முன்னரே இலங்கைத் தீவில் நாகர், இயக்கர், இராட்சதர், தேவர், புலிந்தர் (வேடர்) என்ற ஆதிக்குடிகள் இருந்தார்கள் என்றும் இதில் நாகர்கள் வடக்கிலும் தென்மேற்கிலும் அரசாட்சி செய்தார்கள் என்பது புலனாகின்றது.

மகாவம்சத்தின்படி, மகததேசத்தில் உள்ள உருவெல என்னும் இடத்திலுள்ள அரச மரத்தின் அடியில், புத்தர் ஞானம் பெற்று 9 ஆம் மாதத்தில் ஒரு வைகாசி மாதத்து தைப்பூச முழுமதி நாளில் கவுதம புத்தர் தியானத்தில் அமர்ந்திருக்கின்றார். அப்போது அவருக்குச் சில காட்சிகள் புலனாகின்றன. ”இலங்கையின் மத்தியில் அழகிய நதிக்கரையில் மூன்று யோசனை நீளமும் ஒரு யோசனை அகலமும் உள்ள, மனதுக்கு ரம்யமூட்டும் மகாநாக வனத்தில் இயக்கர்கள் வழக்கமாகக் கூடும் இடம் உள்ளது. பவுத்த மதம் பெரும் வளர்ச்சியடையக் கூடிய இடம் இலங்கை என்றும் ஆனால் முதலில் அங்கு ஏற்கனவே வாழ்ந்து வருகின்ற இயக்கர்களை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்றும் புத்தர் எண்ணுகின்றார்.

இலங்கைக்குப் புத்தர் வான்வழியாகப் பறந்து வந்து பயங்கரமான சூறைக்காற்றை உருவாக்கி இயக்கர்களைப் பயமுறுத்துகின்றார். வான வெளியில் மழையும் இருளையும் உண்டாக்கி அவர்கள் மனதில் அச்சத்தை உண்டாக்குகிறார். “இங்கே உட்கருவதற்காக ஓர் இடம் கொடுங்கள்” என்று புத்தர் கூறினார். இறைவனே எங்கள் தீவு முழுவதையும் வேண்டுமானாலும் தருகிறோம். எங்களைப் பயத்திலிருந்து விடுதலை அளியுங்கள்” என்று கூறினர். ”பின்னர் புத்தர் கிரித்துவீபத்தை வரச் செய்தார். இயக்கர்கள் யாவரும் போய் தங்கியதும் அவர்களை மகாமேகவனத்தை விட்டு கிரித்துவீபத்திற்கு (மலைநாட்டுக்கு) அனுப்பி வைக்கின்றார்.

பிறகு புத்தர் தமது தோல் ஆசனத்தை மடித்து வைத்தார். தேவர்கள் வந்து கூடினர். ”தேவர்கள் கூட்டத்தில் புத்தர் தமது தருமத்தைப் போதித்தார். கோடிக்கணக்கான ஜீவர்கள் மதம் மாறினர். கணக்கற்றவர்கள் தரிசனமடைந்து சீலத்தை பெற்றனர்.” அப்போது அந்தச் அவையில் அவர் தமது சமயக் கொள்கையைப் போதித்தார். தேவவம்ச அரசன் மகாசுமணன் சமந்தகூட மலையை (சிவனொளிபாத மலை) ஆண்டுவந்தான். புத்தரின் போதனைக்குப் பின் அனைத்துத் தேவர்களும் பவுத்தத்தைத் தழுவினர். வணங்கத்தக்க எதையாவது தரும்படி மகா சுமணன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க புத்தர் கொடுத்த தலைமுடியை, புத்தர் அமர்ந்திருந்த இடத்தில் நவரத்தினங்களைக் குவித்து அதன்மீது வைத்து மகியங்கனை தூபியை தாபித்தான்.

பின்னாளில் தேவநம்பிய தீசனின் உடன்பிறப்பின் மகன் உதய சூளாபயன் அந்தத் தூபியை அதிசயத்தோடு பார்த்து அதனை 30 முழ உயரத்துக்கு உயர்த்திக் கட்டினான். மீண்டும் துட்ட கைமுனு தமிழர்களுடன் போரிட்ட போது இந்த இடத்தில் (மகியங்கனை) தங்க நேரிட்டது. அப்போது அந்தத் தூபியை 80 முழ உயரத்துக்குக் கட்டினான். ஆக இலங்கைத் தீவை மானிடர்கள் வாழும் பூமியாக மாற்றிய பின்னர் அம் மகாவீரர் (புத்தர்) மகத நாட்டு உருவெல வனத்துக்குப் புறப்பட்டுச் சென்றார். மகாவம்சம் குறிப்பிடும் “தேவர்கள்“ விஜயன் வருவதற்கு முன்னரேயே இலங்கைத் தீவில் வட இந்தியாவில் இருந்து குடியேறிய ஆரியர்கள் ஆக இருக்க வேண்டும்.

மகாவம்சத்தின்படி, புத்தர் இரண்டாம் முறையும் இலங்கைக்கு வருகை தருகின்றார். அது அவர் ஞானம் பெற்ற 5 ஆம் ஆண்டு சித்திரை முழுமதி நாளில் இடம்பெற்றது. அக்காலத்தில் நாகதீபத்தை (வட இலங்கை) நாகராசன் என்னும் மன்னன் ஆட்சி செய்கிறான். இவனுக்கு ஒரு மகளும் மகோதரன் என்ற மகனும் இருந்தனர். தன் மகளை மலையராட்டிர நாகராசன் என்ற வேறொரு நாகமன்னனுக்கு மணமுடித்து அவளுக்குச் சீதனமாக தன் மணியாசனத்தையும் கொடுத்தனுப்பினான். அவர்களுக்கு குலோதரன் என்னும் மகன் பிறக்கிறான்.

யாழ்ப்பாண நாகராசன் தான் இறக்கும் முன்பு தன் மகனான மகோதரனுக்கு பட்டம் கட்டிவிட்டு இறக்கிறான். இப்போது நாகராசனான மகோதரன் மலையராட்டிர புலோந்திரன் மீது மணியாசனத்தை பெறுவதற்கு பெரும் போர் தொடுக்கிறான். இரு படைகளுக்கும் போர் நடக்கும் போது அவர்களின் நடுவில் புத்தர் தோன்றி முன்பு சூறைக்காற்றை உருவாக்கி இயக்கர் என அழைக்கப்பட்ட ஆதிக்குடிகளைப் பயமுறுத்திய புத்தர், இம்முறை பயங்கர இருளைப் பரவச்செய்து, நாக மன்னர்களையும் அவரது வீரர்களையும் பயங்கொள்ள வைக்கின்றார். மீண்டும் புத்தர் அங்கு வெளிச்சத்தை உருவாக்கியவுடன் நாகர்கள் புத்தரை வணங்கிப் போருக்குக் காரணமான மணியாசத்தில் புத்தரையே அமரச்செய்து அவரைச் சரணடைந்தனர்.

நாகர்கள் அளித்த அமுதை உண்டுவிட்டுப் புத்தர் அங்கு வாழ்ந்த நாகர்களுக்கு பவுத்த தர்ம போதனைகளை போதிக்கிறார். அவர்கள் பவுத்த மதத்தைத் தழுவினார்கள். அப்போரில் கலந்துகொள்ள கல்யாணியை (களனி) ஆண்ட நாக மன்னன் மணியக்கிகனும் அங்கு வந்திருந்தான். அவன் மகோதரனின் தாய் மாமனாவான். அவன் மீண்டும் ஒருமுறை தமது நாட்டுக்கு வரும்படி புத்தரை வேண்டிக் கொண்டான். அதற்குச் சம்மதித்த புத்தர் மகத நாட்டு ஜெத்தவனத்திற்குத் திரும்பினார்.

இந்தக் கதையை ஐம்பெரும் தமிழ் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை “வேக வெந்திறல் நாக நாட்டு அரசர் சின மாசு ஒழித்து மன மாசு தீர்த்து ஆங்கு அறச் செவி திறந்து மறச் செவி அடைத்து பிறவிப் பிணி மருத்துவன் இருந்து அறம் உரைக்கும் திருந்து ஒளி ஆசனம் சென்று கைதொழுதி” என்று குறிப்பிடுகின்றது. (மணிமேகலை - பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை) மணிமேகலை கிபி இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட காப்பியம் ஆகும்.

இது நடைபெற்று மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், புத்தர் மீண்டும் இலங்கைக்கு அவர் ஞானம் பெற்ற 8 ஆம் ஆண்டில் இடம்பெற்றது. மணியக்கிகன் புத்தரைச் சந்தித்து தனது நாட்டிற்கு வரும்படி விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று “பயத்தை வென்றவர்” அறிஞர்க்கு அறிஞர் உத்தரீயத்தை போர்த்துக்கொண்டு, பிட்சா பத்திரத்தை கையிலேந்தி” மணியக்கிகனுடைய கல்யாணி நாட்டிற்கு வைகாசி முழுமதி தினத்தன்று ஐந்நூறு பிக்குகள் புடைசூழக் கல்யாணி நாட்டிற்குச் சென்றார். அங்கு இரத்தினங்கள் பதிக்கப்பட்ட மண்டபத்தில் பிக்குகளுடன் அமர்ந்தார். பல இடங்களுக்கும் சென்று அந்த இடங்களை அருள்பாலித்துத் திரும்புகின்றார்.

அவர் அமர்ந்த இடத்தில் பிற்காலத்தில் களனி இராஜமகா விகாரை கட்டப்பட்டது. நாகமன்னனின் உபசரிப்பிற்குப் பின்னர் அவர்களுக்கு உபதேசம் செய்தபின் சுமணகூட மலைக்குப் புறப்பட்டார். அங்கே தனது பாதச்சுவடுகளைப் பதித்தபின்னர் யெத்த வனத்திற்குத் திரும்பினார். களனியை ஆண்ட களனிதீச மன்னனின் மகளே இளவரசி விகாரமாதேவி ஆவர். ஒரு முறை அரசன் ஒரு அப்பாவித் துறவியை எண்ணெய் கொப்பரையில் உயிரோடு கொதிக்க வைத்துத் தண்டித்தான். இந்தக் குரூரச் செயலால் கோபம் கொண்ட தேவர்கள், கடலை உள்நோக்கி ஓடச் செய்து அந்த நிலத்தை வெள்ளத்தில் ஆழ்த்தினர். ஓர் இளவரசியை கடலுக்குப் பலி கொடுத்தால், பொங்கி வரும் அலைகள் நின்றுவிடும் என்று நிமித்தர்கள் கூறினார்கள். இளவரசி, தன் தந்தையின் பாவத்தைக் கழுவவும் தாய்நாட்டின் பாதுகாப்பிற்காகவும் தன்னைத் தியாகம் செய்ய முன்வந்தாள். அழகாக அலங்கரிக்கப்பட்ட ஒரு படகினுள் அவள் வைக்கப்பட்டாள். அவள் ஓர் அரசனின் மகள் என அந்தப் படகில் எழுத்தி வைக்கப்பட்டது.

**- கனடா நக்கீரன்**

விகாரமாதேவி புறப்பட்டுச் சென்றதும் கடல் மீண்டும் அமைதி அடைந்ததாகவும் வெள்ளம் மீண்டும் பின்வாங்கிவிட்டதாகக் கூறப்படுகிறது. மன்னரும் மிகவும் வருத்தமடைந்தார். பட்டத்தரசி தங்கள் துணிச்சலான இளவரசியின் இழப்புப் பற்றி மிகவும் கோபம் அடைந்தார். அவ்வாறே குடிமக்களும் மிகவும் கோபமாக இருந்தனர். அவர்கள் அனைவரும் மன்னரைக் குறைகூறினர்.

இதற்கிடையில், இளம் இளவரசி பயணம் செய்த படகு இறுதியாக, நாட்டின் தென்பகுதியில் உள்ள கிரிண்டா டொவரா என்று அழைக்கப்படும் இடத்தில் கரை ஒதுங்கியது. இது உருகுணையில் இருந்தது. அது அரசர் காகவண்ண தீசனால் ஆளப்பட்ட ஒரு வளமான நிலம். படகைக் கண்டபோது முதலில் ஒரு மீனவர் அரண்மனைக்கு ஓடி இளவரசிபற்றி அரசருக்குச் செய்தி தெரிவித்தார். தீபவம்சம் மிதவைப் படகை முதலில் பார்த்த பறவைகள் மன்னரிடம் தகவல் தெரிவித்ததாகக் கூறுகிறது.

மக்கள் இளவரசியை ஊர்வலமாக அரண்மனைக்கு அழைத்து வந்தனர். அவளுடைய கதையைக் கேட்ட மன்னர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். நாட்டுக்காகத் தனது உயிரைத் தியாகம் செய்ய மிக்க துணிவும், தேசபக்தியும் வேண்டும். எனவே அந்த குணாம்சங்களைக் கொண்ட இளவரசியை மணந்து கொள்ள அவர் முடிவு செய்தார். லங்கா விகாரைக்கு அருகில் உள்ள ஒரு இடத்தில் இளவரசி கரைசேர்ந்த காரணத்தால் அவருக்கு விகாரமகாதேவி எனப் பெயர் சூட்டப்பட்டது. அவள் கரை இறங்கிய இடத்தில் ஒரு கல்வெட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

காகவண்ண தீசன் மற்றும் விகாரமாதேவிக்கு கைமுனு, சத்தாதீசன் என்ற இரு மகன்கள் பிறந்தார்கள். துட்ட கைமுனு இலங்கையின் சிறந்த மன்னர்களில் ஒருவனாகப் போற்றப்படுகிறான். மகாவம்சத்தின் கதாநாயகனும் துட்ட கைமுனுவே. அது போலவே விகாரமாதேவியே இலங்கையின் சிறந்த நாயகியாக சிங்கள - பவுத்த தேசியவாதிகளால் கொண்டாடப்படுகிறார்.

மகாவம்சம் கூறும் இந்தக் கதையில் கற்பனையும் வலாற்றுக் குறிப்புகளும் கலந்து காணப்படுகின்றன. புத்தர் இலங்கை வந்தார் - வான் வழியாக வந்தார் என்பது முழுக்க முழுக்க கற்பனையாகும். புத்தர் தென்னாட்டுக்கே செல்லவில்லை!

மகாவம்சத்தை இலங்கையின் வரலாற்று ஆவணமாக சிங்கள - பவுத்த பெரும்பான்மை மக்கள் கூறிவந்தாலும் முழுமையான ஒரு வரலாற்று ஆவணமாக அதன ஏற்றுக்கொள்ள முடியாது எனும் கருத்து வரலாற்றாசிரியர்களிடையே உள்ளது. அதேவேளை இலங்கையின் வரலாற்றுக் குறிப்புகள் பல இந்நூலில் இடம்பெற்றிருப்பதனால், மகாவம்சம் என்ற பவுத்த புராணத்தைத் தவிர்த்துவிட்டு இலங்கையின் வரலாற்றை ஆய்வு செய்ய முடியாது எனும் கருத்தும் வரலாற்றாசிரியர்களிடையே உள்ளது.

எது எப்படியிருப்பினும் மகாவம்ச கதையின்படியே விஜயனது வருகைக்கு முன்னரே இயக்கர், நாகர் இலங்கையில் இருந்திருக்கிறார்கள். நாகர்களின் அரசுகள் இலங்கையின் வட மற்றும் மேல் மாகாணத்தில் இருந்தன. துட்டகைமுனுவின் தாய் களனியை ஆண்ட நாகவம்ச அரசனான களனி தீசனின் மகள் என்பதும் நிரூபணமாகிறது. அடுத்த வாரம் துட்டகைமுனு தாய் வழியில் மட்டுமல்ல தந்தைவழியிலும் அவன் ஒரு நாக இளவரசன் என்ற வரலாற்றைப் பார்ப்போம்.

*(வளரும்)*

**வீணாவின் கிறுக்கல்**

இல்லாதவன் பெட்டியில்
ஆயிரம் நியாயங்கள்
இருந்தாலும், அதை
இருப்பவன் பெட்டியில்
இருக்கும் நாணயங்கள்
பொய்யாக்கி விடுகிறது,
அவன் நாணயங்கள்
கரைந்த பின்பு, இவன்
நியாயங்கள் வெளிவரும்,
பொறுத்திரு மனமே தளராதே.

# பெண் போலீஸாரைத் தாக்கிய வழக்கு: அர்னாப் கோஸ்வாமிக்கு முன்ஜாமீன் மனு ஒத்திவைப்பு



மும்பை பெண் போலீஸாரைத் தாக்கிய வழக்கில் ரிபப்ளிக் சேனல் ஆசிரியர் அர்னாப் கோஸ்வாமி, அவரின் மனைவி ஆகியோர் தாக்கல் செய்த முன்ஜாமீன் மனுவை செசன்ஸ் நீதிமன்றம் ஒத்திவைத்தது.கடந்த 2018 ஆம் ஆண்டு உள்ளரங்கு வடிவமைப்பாளர் ஒருவர் செய்த பணிகளுக்குப் பணம் தராமல் ரிபப்ளிக் சேனல் இழுத்தடித்ததால் அவர் தற்கொலை செய்ததாகக் கூறப்படுகிறது. இந்த விவகாரத்தில் ரிபப்ளிக் ஆசிரியர் அர்னாப் கோஸ்வாமி உள்ளிட்ட சிலர் தற்கொலைக்குத் தூண்டியதாக உயிரிழந்தவரின் குடும்பத்தினர் போலீஸில் புகார் அளித்தனர்.

ஆனால், அந்தக் காலகட்டத்தில் பாஜக ஆட்சி மாநிலத்தில் நடந்ததால், அந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டது. ஆனால், சமீபத்தில் மகாராஷ்டிர உள்துறை அமைச்சர் அந்த வழக்கில் மீண்டும் விசாரணை நடத்தப்படும் என்று அறிவித்தார்.இந்த வழக்கின் விசாரணையில் உள்ளரங்கு வடிவமைப்பாளரைத் தற்கொலைக்குத் தூண்டிய குற்றச்சாட்டில் ரிபப்ளிக் சேனல் ஆசிரியர் அர்னாப் கோஸ்வாமியை ராய்காட் மாவட்டத்தில் உள்ள அலிபாக் போலீஸார் கடந்த 4ம் தேதி கைது செய்தனர். இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் நேற்று அர்னாப் கோஸ்வாமிக்கு ஜாமீன் வழங்கியது. இதில் கடந்த 4ம்தேதி லோவர் பரேலில் பகுதியில் உள்ள வீட்டில் அர்னாப் கோஸ்வாமி இருந்தபோது, போலீஸார் அவரைக் கைது செய்ய முயன்றபோது, பெண் போலீஸார் ஒருவரை அர்னாப் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து, தற்கொலைக்குத் தூண்டிய வழக்கில் கைதான அர்னாப் கோஸ்வாமி மீது பெண் போலீஸாரைத் தாக்கிய வழக்கை என்.எம்.ஜோஷி மார்க் போலீஸார் பதிவு செய்தனர்.அர்னாப் கோஸ்வாமி மீது ஐபிசி 153 (அரசு ஊழியரைப் பணி செய்யவிடாமல் தடுத்தல்), 504 பிரிவு (உள்நோக்கத்துடன் புண்படுத்தி அமைதியைக் குலைத்தல்) 506 (குற்றச்சதி) ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.தற்கொலைக்குத் தூண்டிய வழக்கில் அர்னாப் கோஸ்வாமி ஜாமீன் பெற்று வெளியே வந்துவிட்ட நிலையில், பெண் போலீஸாரைத் தாக்கிய வழக்கில் அவரைக் கைது செய்ய மும்பை போலீஸார் ஆயத்தமாகி வருவதாகத் தகவல்கள் கிடைத்தன.

இதையடுத்து, தனது வழக்கறிஞர் பி.பி.ஜாதவ் மூலம் கூடுதல் செசன்ஸ் நீதிமன்றத்தில் முன்ஜாமீன் கோரி அர்னாப் மனுத்தாக்கல் செய்திருந்தார்.இந்த மனு இன்று விசாரணைக்கு வந்தபோது நீதிபதி இல்லாததால், மனுவை வரும் 23ம் தேதி விசாரிக்கப் பட்டியலிடப்பட்டது.இதுகுறித்து அர்னாப் கோஸ்வாமியின் வழக்கறிஞர் ஷியாம் கல்யாண்கர் கூறுகையில், "பெண் போலீஸாரைத் தாக்கியதாக போலீஸார் பதிவு செய்த வழக்கில் அர்னாப், அவரின் மனைவி ஆகியோருக்கு முன்ஜாமீன் கோரி மனுத்தாக்கல் செய்திருந்தோம். இன்று விசாரணைக்கு வந்தபோதிலும் நீதிபதி இல்லாததால், இந்த மனு வரும் 23ம் தேதி விசாரிக்கப்படும் எனப் பட்டியலிடப்பட்டது.உச்ச நீதிமன்றம் நேற்று இடைக்கால ஜாமீன் அளித்துள்ளது. அந்த உத்தரவுக்காகக் காத்திருக்கிறோம். இந்த மனுவில் கைது செய்யத் தடை கோரி ஏதும் கூறவில்லை" எனத் தெரிவித்தார்.

# எத்தனை தடங்கல்கள் வந்தாலும் வேல் யாத்திரை தொடரும்; பாஜக நிர்வாகிகளைக் கைது செய்த தமிழக அரசின் செயலை ஏற்க முடியாது: எல்.முருகன் பேட்டி



பாஜக நிர்வாகிகளைக் கைது செய்த தமிழக அரசின் செயல் ஏற்றுக்கொள்ள முடியாதது என, தமிழக பாஜக தலைவர் எல். முருகன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக, இன்று (நவ. 12) சென்னை, தியாகராய நகரில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் எல்.முருகன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: "வரும் 24ம் தேதி நடைபெறும் வேல் யாத்திரையில் கர்நாடக பாஜக செய்தித் தொடர்பாளர் மாளவிகா அஸ்வினி கலந்துகொள்வார்.

டிச. 2 அன்று தேசிய இளைஞரணிச் செயலாளர் தேஜஸ்வி கன்னியாகுமரியில் கலந்துகொள்கிறார். தேசிய பொதுச் செயலாளர் புரந்தேஸ்வரி தென்காசியில் கலந்துகொள்கிறார்.இறுதிக் கூட்டத்தில் கலந்துகொள்ள பாஜக தேசியத் தலைவர் ஜே.பி.நட்டாவுக்கு அழைப்பு விடுத்திருக்கிறோம். அது இன்னும் முடிவாகவில்லை. ஓரிரு நாட்களில் முடிவாகிவிடும்.எத்தனை தடங்கல்கள் வந்தாலும் இந்த வேல் யாத்திரையை பாஜக தொடரும். 10ம் தேதி நடந்த சம்பவம் வருந்தத்தக்கது. சாலையில் செல்பவர்களையெல்லாம் கைது செய்தனர்.

இந்தக் கைது எதற்காக? முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கைது செய்வதாகச் சொல்கின்றனர். அதற்காகச் சாலையில் செல்பவர்களையும் கோயிலில் இருப்பவர்களையும் கைது செய்வார்களா?மாநிலப் பொதுச் செயலாளர் கே.டி.ராகவன் வீட்டில் இருக்கிறார். சென்னை நிகழ்ச்சிக்கு வருவதற்கு அவர் திட்டமிடவில்லை. விழுப்புரத்திற்குச் செல்வதற்காக அவர் திட்டமிட்டிருந்தார். வீட்டில் இருந்தவரை தடுப்புக் காவலில் வைப்பது எந்த விதத்திலும் நியாயம் கிடையாது.வேறு வேலைகளில் ஈடுபட்டிருந்த பாஜக நிர்வாகிகளையும் கைது செய்துள்ளனர். 23 பேராக நிற்பவர்களையெல்லாம் கைது செய்துள்ளனர். தமிழக அரசின் செயல் ஏற்றுக்கொள்ள முடியாதது.

பாஜக, பல்வேறு தடைகளைத் தாண்டித்தான் வந்துள்ளது. 2 எம்.பி.க்கள் இருந்த கட்சி, இன்று நாட்டை ஆட்சி செய்கிறது. பெரும்பான்மையான மாநிலங்களில் ஆட்சி செய்கிறது.பிரதமரின் கரங்களை வலுப்படுத்தும் விதமாக, பிஹார் மக்கள் வெற்றியைக் கொடுத்திருக்கிறார்கள். இடைத்தேர்தல்களிலும் பாஜக மிகப்பெரிய வெற்றி பெற்றுள்ளது. தெலங்கானாவில் ஆளுங்கட்சியை எதிர்த்து மக்கள் இடைத்தேர்தலில் பாஜகவுக்கு வாக்களித்துள்ளனர். அனைத்து மாநிலங்களிலும் பாஜக வெற்றி பெற்றுள்ளது.எந்தத் தடங்கல்களையும் பாஜக எதிர்கொள்ளும். நெருக்கடி நிலையையே பார்த்த கட்சி பாஜக. தலைவர்களைத் தியாகம் கொடுத்து வளர்ந்த கட்சி பாஜக.

எங்கள் தொண்டர்கள் சோர்ந்துபோக மாட்டார்கள். எங்கள் இலக்கை நோக்கி நாங்கள் முன்னே செல்வோம்". இவ்வாறு எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

# அரசியலுக்கு ரஜினியை வரவேற்று வீடுகளில் ஒட்டப்பட்ட ஸ்டிக்கர்களால் பரபரப்பு




வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட சில பகுதிகளில் ''எங்கள் குடும்ப ஓட்டு ரஜினிக்கே'' என்ற வாசகம் அடங்கிய ஸ்டிக்கர் பலரது வீடுகளில் ஒட்டப்பட்டுள்ளது. நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவதாக கூறியதை அடுத்து அவர் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்துக் கொண்டே சென்றது. சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் 5 மாதங்களே உள்ள நிலையில் அவர் இன்னும் கட்சி அறிவிப்பை வெளியிடவில்லை. இதனால் அவர் அரசியலுக்கு வருவாரா? மாட்டாரா? என்ற குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ரஜினிக்கு ஆதரவாக தமிழகம் முழுவதும் பல்வேறு விதமான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருகின்றன. வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை மாவட்டம் முழுவதும் உள்ள வேலூர், காட்பாடி, வாணியம்பாடி, ஆற்காடு, சோளிங்கர், கே.வி.குப்பம் உள்ளிட்ட 13 சட்டமன்ற தொகுதிகளிலும் பொதுமக்கள் மற்றும் ரஜினி ரசிகர்கள் ரஜினியை அரசியலுக்கு அழைக்கும் விதமாக "உங்களுக்காக கடவுள் கிட்ட நாங்க வேண்டிக்கிறோம். எங்களுக்கு நல்லாட்சித்தர நீங்க வாங்க ரஜினி'' என்று உருக்கமாக போஸ்டர்களை ஒட்டி வந்தனர்.

தற்போது வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட சில பகுதிகளில் ''எங்கள் குடும்ப ஓட்டு ரஜினிக்கே'' என்ற வாசகம் அடங்கிய ஸ்டிக்கர் பலரது வீடுகளில் ஒட்டப்பட்டுள்ளது.

இந்த ஸ்டிக்கரை ரஜினி மக்கள் மன்ற நிர்வாகிகள், அந்தந்த வீட்டின் உரிமையாளர்களிடம் அனுமதி பெற்று ஒட்டியதாக கூறப்படுகிறது. ரஜினியை அரசியலுக்கு வரவேற்று வீடு தோறும் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# இலங்கை கடற்படை பறிமுதல் செய்த 125 தமிழக படகுகளை ஏலத்தில் விற்க நடவடிக்கை: அமைச்சர் ஜெயக்குமார் தகவல்



தமிழக மீனவர்களின் படகுகள் தொடர்பாக மீன்வளத் துறை அமைச்சர் டி.ஜெயக்குமார் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடந்த 3 ஆண்டுகளில் இலங்கைகடற்படையால் பிடிக்கப்பட்ட 92 தமிழக மீன்பிடிப் படகுகள் அரசு மேற்கொண்ட தீவிர முயற்சியால் மீட்கப்பட்டு, அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. 2018ம் ஆண்டு பல்வேறு நிகழ்வுகளில் இலங்கை கடற்படையால் பிடிக்கப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த 165 தமிழக மீனவர்களின் படகுகள் இலங்கை அரசால் விடுவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழக அரசுமீன்வளத் துறை அலுவலர்கள், மீனவ பிரதிநிதிகள், மெக்கானிக்குகள் மற்றும் தச்சர்கள் கொண்டகுழு இலங்கைக்கு அனுப்பப்பட்டது.

அங்கு மீட்கும் நிலையில் உள்ள 36 விசைப்படகுகள் ரூ.47 லட்சத்து 95 ஆயிரம் அரசு நிதியின் மூலம் சீரமைக்கப்பட்டு தமிழகம் கொண்டுவரப்பட்டது. மோசமான வானிலை காரணமாக 4 படகுகள் தமிழகம் கொண்டுவர இயலவில்லை. இலங்கையில் பல்வேறு துறைமுகங்களில்நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மீதமுள்ள மீட்க இயலாத நிலையில் உள்ள 125 படகுகளை அதன்உரிமையாளர்கள் அரசு ஏலம்மூலம் விற்று அத்தொகையைதங்களுக்கு வழங்க கேட்டுக் கொண்டனர்.

அதன் அடிப்படையில் அந்த படகுகளை ஆய்வு செய்து விற்பனை செய்யகுழு அமைக்கப்பட்டது.கரோனா கட்டுப்பாடுகளால் இக்குழு இலங்கைக்கு சென்றுதமிழக படகுகளை விற்பனைசெய்யும் பணியை மேற்பார்வையிட இயலவில்லை. எனவே, இலங்கையில் உள்ள இந்திய தூதரக பிரதிநிதிகள் முன்னிலையில் மீட்க இயலாத தமிழக படகுகளை ஏலம் மூலம்விற்று, அத்தொகையை படகு உரிமையாளர்களிடம் வழங்க ஏதுவாக தமிழக அரசுக்கு அனுப்பி வைக்க இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தை தமிழக அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவீதத்தில் அடைவு பிடிக்கப்படும்



PAWN BROKERING

பழைய பவுண்கள் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளப்படும்

Cash Point



துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.

Cash Point

3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000

# Children's Corner

## A Biography on Donald John Trump



**By: Jyotsna Inthunathan**

Born and raised in Queens, New York City, Trump attended Fordham University for two years and received a bachelor's degree in economics from the Wharton School of the University of Pennsylvania. He became president of his father's real estate business in 1971, renamed it The Trump Organization, and expanded its operations to building or renovating skyscrapers, hotels, casinos, and golf courses. Trump later started various side ventures, mostly by licensing his name. Trump and his businesses have been involved in more than 4,000 state and federal legal actions, including six bankruptcies. He owned the Miss Universe brand of beauty pageants from 1996 to 2015, and produced and hosted the reality television series The Apprentice from 2003 to 2015.Trump's political positions have been described as populist, protectionist, isolationist, and nationalist. He entered the 2016 presidential race as a Republican and was elected in a surprise electoral college victory over Democratic nominee Hillary Clinton while losing the popular vote. He became the oldest first-term U.S. president and the first-term U.S. president and the first without prior military or government service. His election and policies have sparked numerous protests. Trump has made many false or misleading statements during his campaign and presidency. The statements have been documented by fact-checkers, and the media have widely described the phenomenon as unprecedented in American politics. Many of his comments and actions have been characterized as racially charged or racist.

During his presidency, Trump ordered a travel ban on citizens from several Muslim-majority countries, citing security concerns; after legal challenges, the Supreme Court upheld the policy's third revision. He enacted a tax-cut package for individuals and businesses, rescinding the individual health insurance mandate penalty of the Affordable Care Act, but has failed to repeal and replace the ACA as a whole. He appointed Neil Gorsuch, Brett Kavanaugh and Amy Coney Barrett to the Supreme Court. In foreign policy, Trump has pursued an America First agenda, withdrawing the U.S. from the Trans-Pacific Partnership trade negotiations, the Paris Agreement on climate change, and the Iran Nuclear deal. Finally, Trump lost against Biden in the 2020 U.S. election.

கேரளா மூலிகை மருத்துவம்

வைத்திரயர் - சஞ்சீவ ராஜூ

பரம்பரை மூலிகை வைத்தியசாலை
பதினொரு பரம்பரையாக நாடி பார்த்து உங்களது உடம்பிலிருக்கும் நோய்களைக் கண்டறிந்து அதற்கேற்ற மருந்துகளை தருகின்ற வைத்தியர் பரம்பரையைச் சேர்ந்த சஞ்சீவ ராஜூ இந்தியா முதல் மலேசியா, சிங்கப்பூர், பிரான்ஸ், ஜேர்மன், லண்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்று மருத்துவம் செய்த பின் தற்போது கனடா வந்துள்ளார்.

பல இடங்களில் மருத்துவம் செய்து நம்பிக்கை இழந்து விட்டீர்களா? கவலைப் பட வேண்டாம். பக்க விளைவுகளற்ற தகுந்த மருந்துகளைப் பெற்று உங்கள் வருத்தங்கள் குணமாக ஒரு முறை நம்மிடம் வாருங்கள். நல்ல தீர்வு பெற்றுச் செல்லுங்கள். இலவச ஆலோசனை வழங்கப்படும்.





வேர், பச்சை இலைகள், பட்டைகள், கிழங்குகளில் இருந்து பெறப்பட்டு பொடியாக, கசாயமாக, குளிசைகளாக, லேகியமாக இந்த இயற்கை மருந்துகள் தரப்படும்.
எந்தவித பக்க விளைவுகளும் கிடையாது! நம்பி வாருங்கள்! நலமுடன் வாழுங்கள்!

ஆஸ்துமா, அலர்ஜி, மூச்சுத்திணறல், தும்மல், நெஞ்சுச்சளி, தோல் வியாதி சொறியாஸிஸ், முடக்குவாதம், மூட்டு வலி, வயிற்றுவலி, இடுப்பு வலி, முதுகு வலி, கை-கால் வலி, கழுத்துவலி, ஒற்றைத் தலைவலி, பக்க வாதம், நரம்புத் தளர்ச்சி, நீரழிவு (சர்க்கரை வியாதி), சிறுநீரகக்கற்கள், வாய்வுத் தொல்லைகள், குடற் புண், இரத்த பலம் அபிவிருத்தி, ஆண்களுக்கான பிரச்சனைகள், ஆண்மைக் குறைவு, உடல் பருமன்-குறைக்க, கூட்டுவதற்கு, முடி உதிர்தல், ஞாபக மறதி, உள்மூலம், வெளிமூலம், பகந்திரி மூலம், கால் வெடிப்பு, மஞ்சட்காமாலை, வெண்குஷ்டம், பெண்களுக்கான மாதவிடாய்ப் பிரச்சனை, நெஞ்செரிதல், மலச்சிக்கல், செக்ஸ் பிரச்சினை, மன அழுத்தம், காக்கா வலிப்பு, ஞாபக மறதி, சரவாங்கி போன்ற நோய்களை மூலிகை வைத்தியம் மூலம் குணப்படுத்த முடியும். அத்துடன் கர்ப்பப்பை கோளாறுகள், குழந்தையின்மைக்கான மருத்துவத்துடன், சகல நோய்களுக்கும் சிகிச்சை செய்யப்படும். அத்துடன் போதைப் பொருட்களை உட்கொள்ளும் பழக்கத்தை மறப்பதற்கான மருந்துகளும் தரப்படும்.

2900 MARKHAM ROAD, MajesticCity UNIT L 13 ,
OPP. VASANTHAM SUPER MARKET, MARKHAM RD,
SCARBOROUGH, ON, M1X 1E6

647-294-3189

மலேசிய மடல்:

# சொந்த ஊரில் பிரதிபலிக்காத 2020 தீபாவளி

மலேசிய இந்துப் பெருமக்கள் இவ்வாண்டு கொண்டாடும் தீபாவளி பலவகையில் வேறுபட்டுள்ளது. மலேசியவாழ் இந்துக்களின் தலையாய சமய விழா திபாவளித் திருநாள். அத்தகையத் திருநாளை வழக்கமாக சொந்த ஊரில் கொண்டாடும் வாய்ப்பையும் குதூகல சூழலையும் பெரும்பாலான இந்துக்களுக்கு தடுத்துவிட்டது கோவிட்-19 தாக்கம்.

தீபகற்ப மலேசியா மற்றும் சபா, சரவாக் மாநிலங்களைச் சேர்ந்த இந்து மக்கள் நாட்டின் மையப் பகுதியான கிள்ளான் பள்ளத்தாக்கில் வசிக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள், தீபாவளி சமயத்தில் சொந்த ஊருக்கு திரும்புவதற்காக சுமார் ஒரு மாத காலத்திற்குமுன் பயண ஏற்பாட்டை செய்யும்போதே அவர்களை தீபாவளி குதூகலம் தொற்றிக் கொள்ளும்.

கொரோனா பாதிப்பின் மூன்றாவது அலை எழுந்துள்ள தற்போதைய சூழலில் மத்தியக் கூட்டரசு நாட்டின் குறிப்பிட்ட சில மாநிலங்களில் கட்டுப்படுத்தப்-பட்ட நடமாட்ட கட்டுப்பாட்டு ஆணையைப் பிறப்பித்துள்ளது. அவற்றுள் சிலாங்கூர், கோலாலம்பூர் மற்றும் புத்ராஜெயா கூட்டரசுப் பிரதேச மாநிலங்களும் அடங்கும். இதனால், இந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தத்தம் சொந்த ஊருக்கு செல்ல முடியாமல் அந்தந்தப் பகுதி-யிலேயே முடங்க வேண்டிய கட்டாயாம் எழுந்துள்ளது.




இதன் விளைவாக, நாட்டின் மையப் பகுதியி-லேயே தங்களின் தீபத் திரு-நாள் கொண்டாட்டத்திற்கு பல்லாயிரக் கணக்கான இந்து மக்கள் அணியமாகி விட்டனர்.

அதேவேளை, கடைவ-ீதி எங்கும் காணப்படும் வழக்கமான மக்கள் கூட்டமும் ஆர்ப்பரிப்பும் இவ்வாண்டு தென்படவில்லை. பிரிக் ஃபீல்ட்ஸ் லிட்டில் இந்தியா வட்டாரம், மஸ்ஜிட் இந்தியா பகுதி, கிள்ளான் துங்கு கிளானா வர்த்தகப் பகுதி, கோலாலம்பூர் ஜாலான் சுல்தான் அஸ்லான் ஷா(ஈப்போ சாலைப் பகுதி) போன்ற பகுதிகளில் தென்படும் மக்கள், தம் முகத்தில் உற்சாகம் இன்றி ஆடை அணிகலண்கள், பலகார பண்டங்கள், பட்டாசு வகை உள்ளிட்ட பொருட்களை வாங்குவதிலும் முகத்தில் அணிந்துள்ள பாதுகாப்பு கவசம் சரியாக பொருந்தி இருக்கிறதா என்பதை அடிக்கடி சரிபார்ப்பதிலும் மட்டும் விழிப்பாக இருந்து விரைவாக இல்லத்திற்கு திரும்புவதிலேயெ குறியாக இருக்கின்றனர்.

தீபாவளி என்றாலே பிள்ளைகளுக்குதான் கொண்டாட்டம். அவர்களை அருகில் நிறுத்தி வைத்துக் கொண்டு ஒவ்வொன்றாக பார்த்துப் பார்த்து வாங்கிக் கொடுக்கும் பெற்றோர் மற்றும் பெரியவர்களின் நிலை திண்டாட்டமாக இருந்தாலும் அதில் ஒருவித மனநிறைவு வெளிப்படும்.



அதற்கெல்லாம் வாய்ப்பில்லாத வகையில், நடமாட்டக் கட்டுப்பாடும் பயணம் கட்டுப்பாடும் அமைந்துவிட்டன.

வாகனங்களில் இருவர் மட்டுமே பயணம் செய்யமுடியும் என்ற கட்டுப்பாடு நடைமுறையில் இருப்பதால், சிறியவர்களையும் பெரியவர்களையும் கடைவீதிப் பக்கம் காண முடியவில்லை. இதனால்தான் பெற்றோரும் மற்றோரும் அரை மனதுடன் தென்படுகின்றனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, மலேசியாவில் பண்டிகை என்றாலே பல இன மக்களும் கலந்து கொள்ளும் பொது உபசரிப்புதான் சிறப்பு. பிரதமர் முதல் அமைச்சர்கள் வரை என மத்திய அரசு சார்பிலும் மாநில அரசுகளின் சார்பிலும் ஆங்காங்கே பொது விருந்தோம்பல் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படும்.

எந்தப் பண்டிகையாக இருந்தாலும் அதில், மூவின மக்களும் கலந்து கொண்டு சமய-சமூக நல்லிணக்கத்தை உயர்த்திப் பிடிக்கும் பாங்கு இத்தகைய பண்டிகைக் காலங்களில்தான் மிகையாக வெளிப்படும். அதற்கும் வழி இல்லாமல் இந்தக் கொடுமையான கொரோனா நச்சுயிரி செய்துவிட்டது.

கடந்த மேத் திங்கள் 24, 25-ஆம் நாட்களில் கொண்டாடப்பட்ட நோன்புத் திருநாளின்போதும், மலாய்க்காரர்கள் உள்ளிட்ட முஸ்லிம் சமயத்தவர் அனைவரும் இதே சஞ்சலத்தை எதிர்கொண்டனர் களையிழந்த நிலையில் கொண்டாடப்பட்ட நோன்புத் திருநாள் வேளையிலும் நாட்டில் வழக்கமாக நடத்தப்படும் பொது உபசரிப்பு இடம்பெறவில்லை.

இன்னும் நாற்பது நாட்களில் கொண்டாடப்பட இருக்கும் கிறிஸ்துமஸ் பண்டிகையின்போது நிலைமை எப்படி இருக்கும் என்பது தெரியவில்லை. அதற்குள் நிலைமை சீரடையும் என்று எதிர்பார்ப்போமே.



உலகம் இதுபோன்ற சுகாதார சிக்கலை எதிர்கொள்ளாத நலமான சூழல் எதிர்காலத்தில் அமையும் என்ற எதிர்பார்ப்புடன் அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாட்டு முறை-களைக் கடைப்பிடித்து, உயிர்ப் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து, சொந்த ஊருக்கு செல்ல முடியாமல், அண்டை அயலா-ரையும் சுற்றத்தார் நட்பாரையும் சந்திக்க முடியாமல் அமைதியாக இந்த ஆண்டு தீபத் திருநாளைக் கொண்டாடுகின்றனர் மலேசியவாழ் இந்துப் பெருமக்கள்.

எது எவ்வாறாயினும் கனடவாழ் இந்துப் பெருமக்கள் அனைவருக்கும் மலேசிய இந்துக்களின் தீபாவளி வாழ்த்து உரித்தாகட்டும்!.

*நக்கீரன் - Nakkeeran 013-244 36 24*

# தொற்று அபாயம் நிறைந்த காலத்தில் வீட்டிலிருந்த வண்ணம் விரதங்களை அனுஸ்டிப்பது எப்படி?



அனைத்து நாடுகளிலும் தற்போது உலகளாவிய பெருந்தொ ற்றான கொரோனாவை கட்டுப்படுத்தும் முகமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகள் காரண-மாக ஆலயங்களில் பக்தர்கள் கூடுவது தடை செய்யப்பட்டுள்ளது. அர்ச்சகர்கள் மாத்திரம் ஆலயங்களில் பணி செய்யலாம்.

இந்நிலையில் கேதாரகௌரி விரதம் தற்போது அனுஸ்டிக்கப்பட்டு வருவதோடு, எதிர்வரும் 14.11.2020 தீபாவளி தினத்தன்று நிறைவடையவுள்ளது. இந்நிலையில் மக்கள் இவ்விரதத்தை எவ்வாறு நி-றைவு செய்வது என்ற குழப்பத்திற்கு முகம்கொடுத்துள்ளனர்.

எவ்வாறான நடைமுறைக-ளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற விளக்கமே இக்கட்டுரையின் நோக்கம். பொதுவாக வரலக்ஷ்மி விரதம், கேதார கௌரி விரதம், காரடையா நோன்பு போன்றவை வீடுகளில் செய்யப்படும் விரத வழிபாடுகளே ஆகும். ஆயினும், இலங்கையில் அவை ஆலய வழிபாடுகளாகவே பெரிதும் இருந்து வருகின்றன.

கேதாரகௌரி விரதம் அனுசரிக்கும் பல்லாயிரம் பக்தர்கள் இலங்கையில் உள்ளனர். அவர்கள் குறித்த விரத வழிபாடுகளை ஆலயங்களில் சிவாச்சாரியார்களின் வழிகாட்டலிலேயே மேற்கொ ள்கின்றனர். ஆனால் இம்முறை ஆலய வழிபாடு சாத்தியமாகாத நிலையில் கேதார விரதத்தை வீட்டில் அனுசரிக்க வேண்டிய நிலை உண்டாகியுள்ளது.

அவர்கள் எவ்வாறு தீபாவளி தினத்தன்று இல்லத்தில் கேதா ரேஸ்வர பூஜை செய்யலாம் என பார்ப்போம். (ஏற்கனவே சிவபூஜை செய்பவர்க ளுக்கான பதிவல்ல இது. புதிதாக அன்று அனுஷ்டிப்பவர்களுக்குரிய பதிவே இதுவாகும்).

முதலில் தூய்மையாகி, பூஜை செய்யும் இடத்தையும் தூய்மைப்படுத்திக் கொள்ளுங்கள். பூஜைக்குரிய பொருட்களை தயார் செய்து கொள்ளுங்கள். 21 வெற்றிலை, பாக்கு, பழம், அதிரசம் (அரியதரம்) போன்ற நெய்வேதனங்களையும் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.இரண்டு கும்பங்களை வைத்து வலது பக்கம் சிவபெருமானையும் இடது பக்கம் பார்வதியையும் கும்பங்களில் எழுந்தருள செய்து வழிபடலாம்.

இல்லாவிடில் ஒரு கும்பம் வைத்து அதில் அம்பிகையையும் புற்று மண்ணில் லிங்கம் அமைத்து அதில் பரமேஸ்வரனையும் வழிபடலாம். அந்த வாய்ப்பும் இல்லாதவர்கள் சிவன்- அம்மன் படத்தை வைத்து விளக்கேற்றி வழிப-டலாம். மும்முறை தலையில் குட்டி பிள்ளையாரை வணங்கி சங்கல்பம் செய்து கொண்டு தூயநீரால் சுத்தப்படுத்திக் கொண்டு தீபம் ஏற்றி துதிகளை சொல்லி வழிபாடு செய்ய வேண்டும். இப்போது மஞ்சளுக்கு பெருந்தட்டுப்பாடு ஆதலால், ஏதோ ஒரு வகையில் (பசுஞ்சாணத்திலாவது) பிள்ளையாரை வழிபடல் வேண்டும்.

இருபத்தொரு முடிச்சிட்ட நோன்பு நூலை லிங்கத்தின் மேல் அல்லது கும்பங்களின் மேல் அல்லது படத்தில் சாற்றி வழிபடலாம். சிவபெருமானுக்கு உகந்த அஷ்டோத்திர சத நாமாவளி, லிங்காஷ்டகம், சிவபுராணம் போன்ற தோத்திரங்களையும் திருமுறை, காப்பு பாடல் போன்றவற்றையும் பாடலாம்.

காப்பு நூலில் உள்ள ஒவ்வொரு முடிச்சையும் (கிரந்தியையும்)

1. சிவாய நம: 2. வாஹாய நம: 3. மஹாதேவாய நம: 4. வ்ருஷபத்வஜாய நம:
5. கௌரீசாய நம: 6. ருத்ராய நம: 7. பசுபதயே நம: 8. பீமாய நம:
9. திரியம்பகாய நம: 10. நீல லோஹிதாய நம: 11. ஹராய நம:
12. ஸ்மர ஹராய நம: 13. பவாய நம: 14. சம்பவே நம: 15. சர்வாய நம:
16. சதாசிவாய நம: 17. ஈஸ்வராய நம: 18. உக்ராய நம: 19. ஸ்ரீ கண்டாய நம:
20. நீல கண்டாய நம: 21. கேதாரேஸ்வராய நம

இவ்வாறான இருபத்தொரு நாமங்களால் 21 பூக்கள் வில்வத்தால் அர்ச்சனை செய்தல் வேண்டும். பின்பு இறைவன் - இறைவிக்கு தூபம், தீபம் காட்டி நெய்வேதனம் சமர்ப்பிக்க வேண்டும். நிறைவாக காப்பை எடுத்து, "ஆயுஸ்ய வித்யாம்ச ததா சுகம், ஸௌபாக்ய ம்ருத்திம் குரு தேவ தேவ∴ ஸ ம்ஸார கோராம்புநிதௌ நிமக்நம், மாம் ரக்ஷ கேதார நமோ நமஸ்தே∴". என்ற சுலோகத்தை சொல்லி பிரார்த்திக்க வேண்டும்.

பின்னர் வீட்டிலுள்ள வயது முதிர்ந்த சுமங்கலிப்பெண் கையால் அல்லது கணவன் கையால் நூலை இடது கையில் பெண்கள் கட்டிக் கொள்ள வேண்டும். நிறைவாக, பூஜைக்கான தக்ஷணையை அருகிலுள்ள குருவிடம் அல்லது அந்தணரிடம் சமர்ப்பிக்கலாம். அதுவும் இயலாத போது கோயில் உண்டியலில் சேர்ப்பிக்க வேண்டும். (உடனே சாத்தியமில்லாத போது எடுத்து வைத்து பின் சேர்ப்பிக்கலாம்).

இது ஓரளவு சுலபமாக பூஜையை வீட்டில் செய்யும் முறைமை ஆகும். இதற்கும் வசதியற்றவர்கள் திருமுறைகளை பாடி வழிபாடு செய்வதும் ஏற்கத்தக்கதே.


எது எவ்வாறாயினும் மெய்யன்போடு உளமாற எல்லாம் வல்ல சிவகாமி நேசனை நினைந்துருகுகி 21 வாரங்கள் தொடர்ந்து செய்து வந்தால் பரிபூரண பலன் இகத்திலும் பரத்திலும் உடன் சித்திக்கும் என்பது எம்பெருமான் வார்த்தையாக கௌதமர் கூறுகிறார். மேலும் இந்தப் பூஜையால் சகல பாக்கியத்தை பெறுவ-தோடு அர்த்த நாரீஸ்வர இறை அருளால் நோயும் துயரும் அகலட்டும். இன்பமே பெருகட்டும் என பிரார்த்திப்போம்.

அன்பர்கள் இந்த நோன்பை பக்தியோடு செய்து சுகக்ஷேமங்களை அடைந்து மேன்மையாக வாழ்வார்களாக.

**சிவஸ்ரீ கனக கிருஸ்ணாத குருக்கள் - கொழும்பு**

- மொன்றியல் வீணைமைந்தன் எழுதுகின்றார்

# #21 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்




"அவருக்கு முதல் பொண்டாட்டி (சினிமாவில்) நான் தான்! எனக்குத் தாலி கட்டிவிட்டுத்தான் சிவாஜி அவர்கள் கமலா அம்மாவுக்கு மாலை சூட்டி மனைவியாக்கிக் கொண்டார்" என சிரித்துக்கொண்டே கூறினார் திருமதி பத்மினி அவர்கள்.

"சிவாஜி கணேசன் அவர்களுடன் கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு மேலான நட்பு எனக்கு. இண்டஸ்ட்ரியை எடுத்துக்கிட்டீங்கனா அவருடன் நான் தான் அதிக படங்களில் நடித்திருக்கிறேன். சுமார் 59 படங்களுக்கு மேல் இருக்கும் எனச் சொல்றாங்க. அவருடைய படங்களில் "எதிர்பாராதது" படத்தில் முதலில் காதலியாக விருந்து பின் அவரது தந்தையை மணந்து சித்தியானேன். "மங்கையர் திலகம்" படத்தில் சிவாஜிக்கு அண்ணியாக நடித்தேன். இந்த இரண்டு படங்களையும் தவிர்த்து மிகுதி எல்லாப் படங்களிலும் நானே கதாநாயகி. 1952இல் இருவரும் இணைந்து நடித்த படம் "பணம்". கலைவாணர் என் எஸ் கிருஷ்ணன் இயக்கியது. முதல் சீனில் எங்கள் இருவருக்கும் கல்யாணம். நான் மணமகள் வேஷத்தில் மாமனார் வீட்டிற்கு வருகிறேன். நிஜவாழ்வில் அன்றுதான் சிவாஜிக்குக் கல்யாணம் படப்பிடிப்பு முடிந்ததும் நேராக சுவாமி மலைக்கு சென்று கமலா அம்மா கழுத்தில் தாலி கட்டினார். அவருடைய திருமணம் மே ஒன்றாம் தேதி 1952 இல் நடந்தது. இப்போதும் அவரைச் சந்திக்கும் போது பழைய நினைவை சொல்லி தமாஷ் பண்ணுவோம். அதற்குப் பிறகு எத்தனையோ படங்களில் சேர்ந்து நடித்தோம். 86ல் கூட "தாய்க்கு ஒரு தாலாட்டு" "லட்சுமி வந்தாச்சு" படங்களில் இணைந்தோம். "தில்லானா மோகனாம்பாள்" லே நடித்தது மறக்க முடியாத அனுபவம். பதினெட்டு வயதுப் பெண் ரோல் அது. அப்போ எனக்கு 38 வயசு. அந்தப் பாத்திரத்துடன் வயசை நினைவு வச்சுக்கிட்டு நடிக்க வேண்டியிருந்தது. உடம்பை ஒல்லியாக்க வேண்டியிருந்தது.

அந்த மாதிரி சமயத்திலே நமக்கு நம்ம வாழ்வே சொந்தமில்லை. தொழிலுக்கும் ரசிக ஜனங்களுக்கும் தான் அது சொந்தம் என்கிற எண்ணம் ஏற்பட்டது. டைரக்டர் ஏபி நாகராஜன் எனக்கும் சிவாஜிக்கும் கதைக்கேற்றாப் போல் போட்டி உணர்வு ஏற்படனுமென்று இரண்டு தனித்தனி கொட்டேஜ் கட்டினார். பத்மினி குரூப் ஒரு கொட்டேஜ் என்று யாரையார் மிஞ்சுறாங்க பார்க்கலாம் என்கிற போட்டியை உருவாக்கினார். அதனால் தான் படம் வெற்றிப் படமாச்சு.." என்று நாட்டிய பேரொளி பத்மினி அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன் 90களில் மொன்றியல் நகருக்கு வந்திருந்த வேலை எனக்கு அளித்த நேர்காணலின் போது மனம் திறந்து உரையாடினார். இப்போது கூட ஊருக்குப் போகிற சமயம் சிவாஜியை போய் பார்ப்பதுண்டு, "நலம் தானா" என விசாரித்து கொள்வேன் என்று சிரிப்புடன் கூறினார். அப்படியொரு ஜோடிப்பொருத்தம் அவர்கள் இருவருக்குமிடையில். சிவாஜி - பத்மினி என்று தான் எல்லோரும் ஜோடி சேர்த்து பேசுவார்கள். இவர்களுக்காகத் தான் தமிழ் சினிமா வளர்க்கப்பட்டது என எண்ணும் வண்ணம் சிவாஜி பத்மினி இருவரும் தனி ராஜாங்கமே நடத்தினார்கள், என்று கூறும் அளவிற்கு பல வெற்றிப்படங்களில் இணைந்து புகழ் நாட்டினார்கள். இவர்கள் இருவரும் இணைந்த படங்களில் "தங்கப்பதுமை" "உத்தமபுத்திரன்" "எதிர்பாராதது" "அமரதீபம்" "தூக்குத்தூக்கி" "பாக்கியவதி" "மங்கையர் திலகம்" "மரகதம்" "புதையல்" "இரு மலர்கள்" "தேனும் பாலும்" "தெய்வப்பிறவி" "தில்லானா மோகனாம்பாள்" "விளையாட்டுப் பிள்ளை" ஆகியவை சிறந்த திரைச்சித்திரங்களாகும். திருமதி பத்மினி அவர்களுடன் பல படங்களில் இணைந்தாலும் வேறு சில புகழ்பெற்ற கதாநாயகிகளுடன் ஓரிரு படங்களில் மட்டுமே சிவாஜி அவர்கள் இணைந்துள்ளார். குறிப்பாக திருமதி அஞ்சலி தேவியுடன் "பூங்கோதை" "முதல் தேதி" "நான் சொல்லும் ரகசியம்" ஆகிய மூன்று படங்களில் மட்டுமே இணைந்து நடித்துள்ளார்.

"பராசக்தி"யில் இவர் நடித்துக் கொண்டு இருக்கும் போது சிவாஜி ஐயா அவருடைய சம்பளம் மாதம் ரூபா 250 மட்டுமே!. ஆனால் அதே ஆண்டில் (1952) "பூங்கோதை" படத்திற்கு தயாரிப்பாளரான திருமதி. அஞ்சலிதேவி வழங்கிய ஊதியம் ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம். முதன் முதலில் தனக்கு அக்காலத்தில் அதிக சம்பளம் வழங்கிய அஞ்சலி தேவி அவர்களை சிவாஜி அவர்கள் எப்போதும் "முதலாளி" அம்மா என்று நன்றியுடன் அழைப்பதுண்டு. அஞ்சலிதேவியுடன் இணைந்து நடித்த "முதல் தேதி" படம் இந்த காலத்திற்குமேற்ற குணச்சித்திர பாத்திரப்படைப்பை கொண்ட படமாகும். புகழ்பெற்ற "மனோகரா"வில் திருமதி கிரிஷாவுடன் ஜோடி சேர்ந்தார். அதேபோல் ஜி வரலட்சுமியுடன் "வாழ்விலே ஒரு நாள்" "அரிச்சந்திரன்" "நான் பெற்ற செல்வம்" ஆகிய படங்களில் ஜோடியாகவும் "சம்பூர்ண ராமாயணத்தில்" கைகேகியாகப் பாத்திரமேற்ற வரலட்சுமிக்கு மகன் "பரதன்" ஆக சிவாஜி வேடமேற்றிருந்தார். கதாநாயகிகள் சிலர் வெவ்வேறு படங்களில் துணைப் பாத்திரமேற்று தாயாகவும், சகோதரியாகவும் சிவாஜியுடன் இணைந்து உள்ளார்கள். பொதுவாக சிவாஜி அவர்கள் நடித்த சமூகப் படங்கள் மத்திய தர குடும்பப் பெண்களை கண்ணீர் விட்டு அழ வைக்கும் பாத்திர படைப்புகள் கொண்டவையாக அமையும். அரை நூற்றாண்டு கால திரையுலக வரலாற்றில் தலைமுறை கதாநாயகிகளுடன் இணைந்த பெருமையை கொண்டவர் நடிகர் திலகம் அவர்கள். சுமார் நாற்பத்துமூன்று கதாநாயகிகளுடன் ஜோடி சேர்ந்தும் பத்மினி, கே ஆர் விஜயா, சரோஜா தேவி, தேவிகா, சௌகார் ஜானகி, சாவித்திரி, சுஜாதா ஆகியோருடனேயே அதிக படங்களில் இணைந்துள்ளார். இவர்கள் யாவரும் சிவாஜி அவர்களுக்கு சளைக்காமல், ஈடுகொடுத்து நடிக்கும் ஆற்றல் மிகுந்தவர்களே!

ஆனாலும், சிவாஜி அவர்கள் குறிப்பாக இரு நடிகைகளுடன் இணையும்போது மிகவும் உன்னிப்பாக தன்னைத் தயார் நிலையில் வைத்திருப்பது "நடிகையர் திலகம்" சாவித்திரி, ஆச்சி மனோரமா இருவரும் பங்கேற்கும் படங்களில் என்று கூறியுள்ளார். கொஞ்சம் அசந்தாலும் தன்னை விழுங்கி விடுவார்கள் என்று சொல்லுவார்.

"சிவாஜியின் கதாநாயகிகள்"... என அவருடன் இணைந்து நடித்தவர்களுள் முக்கியமான சிலரை நினைவுக்குக் கொண்டு வருவோம். சிவாஜி ஐயாவின் முதல் படமான "பராசக்தி"யில் அவருக்கு ஜோடியாக அறிமுகமானவர் "பண்டரிபாய்" என்பவராகும். "பராசக்தி"யில் குணசேகரனுக்கு (சிவாஜி) காதலியாக "விமலா"எனும் பாத்திரத்தை உருவாக்கி கலைஞர் மு க அவர்கள் தனது பேனா முனையில் கருவான உணர்ச்சிமிகு வசனவீச்சுகளை அவர் மூலம் பேச வைத்திருப்பார் இதோ சில வீச்சுகள்..



விமலா: ஆம்! உன் கண்ணைத் திறந்தவள் அவள்தான். நீ ஏழையாக ஆக்கப்பட்டாவிட்டால்.. ஏழை உலகை நினைத்திருக்க மாட்டாய்! அப்படி ஒரு உலகம் இருப்பதாகவே உனக்குத் தெரிந்திருக்காது. உன் உலகம் உல்லாசபுரியாக இருந்திருக்கும்! மாளிகையிலேயே வீசும் தென்றலை அனுபவிப்பாய்! குடிசையிலே குமுறும் புயலைக் காணமாட்டாய்! சமுதாயக் கோணல்களை வெறுக்கக் காத்திருக்கிறாய்! ஆனால் எரிமலையைத் தண்ணீர் ஊற்றி அணைக்க பார்க்கிறாய்! மலைப்பாம்பை அடக்க மகுடி ஊதுகிறாய்! சமுதாய புரட்சி ஆலகால விருட்சத்தின் கிளையை வெட்டுவதல்ல... அதன் ஆணிவேரையே பெயர்ப்பது தான்! வெட்கப்படு.. நீ மேற்கொண்ட வேலைகளுக்கு வேதனை தீர்க்கும் மார்க்கம் நீ போட்ட வேஷங்கள் அல்ல..! அதற்காக மட்டும் இருந்திருக்கக் கூடாது! அவதிப்படும் ஆயிரமாயிரம் தங்கைகளுக்காக இருந்திருக்க வேண்டும்! அதற்காக வெட்கப்படு... வேதனைப்படு... விகாரப்படு...

குணசேகரன்: போதும்..! போதும்...!

விமலா: மன்னித்துக்கொள்... உன் மனதை புண்படுத்திவிட்டேன். பாலைவனத்தைப் பூஞ்சோலையாக்கப் புதியபாதை காணவேண்டும். உன்னைப்போல் மண்ணை வாரி இறைத்து பயனில்லை!

குணசேகரன்: ஆமாம்! உலகப் புத்தகத்தின் அனுபவ ஏடுகளை இப்படி புரட்டுகிறாயே! இதற்கெல்லாம் ஆசிரியர் யார்?

விமலா: எல்லாம் "அண்ணா"தான்!

குணசேகரன்: அண்ணாவா! அண்ணாவா என்று "பராசக்தி" படத்தில் தனது முதல் நாயகியாக நடித்த பண்டரிபாயைப் பார்த்து ஆச்சரியத்துடன் விழிப்பார். கலைஞர் மு க அவர்கள் பேரறிஞர் அண்ணாவை குறிக்கக்கக்கூடியதாக திரைக்கதையில் வரும் விமலாவின் அண்ணாவுக்கூடாக இந்த உரையாடல் சித்திரத்தைத் தீட்டியிருந்தார். இது கலைஞருக்கேயுரிய கைவந்த கலையாகும். "பராசக்தி" திரைப்படத்தில் இக்காட்சியைத் தொடர்ந்து... கனவுக்காட்சியாக நாயகனும், நாயகியும் ஆடிப்பாடும் காதல்கீதமாக.. "புது பெண்ணின் மனதை தொட்டு போனவரே... உங்க எண்ணத்தைச் சொல்லி விட்டு போங்க..." எனும் கவிஞர் கேபி காமாட்சியின் பாடல் இடம்பெறும். இந்த கவிஞர்தான் படத்தில் பூசாரியாகவும் நடித்திருப்பார். சிவாஜிக்கு நிகராக தமிழ் வசனங்களை மிக அழுத்தம் திருத்தமாகவும் டைமிங் தவறாமலும் உணர்ச்சி பாவத்துடன் பேசி நடிக்கும் ஆற்றல் மிக்கவர்களுள் பண்டரிபாய் முக்கியமானவர். இவரே தனது அடுத்த படமான "திரும்பிப்பார்" சிவாஜியின் சகோதரியாக நடித்திருப்பார். இப்படத்தில் சிவாஜி எதிர்மறை பாத்திரம் அதாவது ஸ்திரிலோகனாக அன்றி ஹீரோவாக வருவார். கதாநாயக அந்தஸ்து பறிபோய்விடுமே என கிஞ்சித்தும் தயங்காமல் வில்லக்குணம் படைத்த பாத்திரமேற்றுக் கலக்கியிருப்பார் நமது சிவாஜி. இப்படம் கலைஞரின் பேனா முனையிலிருந்து கிளம்பிய தீப்பொறிகளால் புரட்சிக்காவியமானது. "தீயவனே திருந்து! உனக்கு ஒரு பெண்தானே வேண்டும். இதோ நான் இருக்கிறேன்"... "பரந்தாமா..! திரும்பிப்பார்... இங்கேயல்ல! நீ நடந்து வந்த பாதையிலே..." என்று சகோதரியாக நடித்த பண்டரிபாயின் மின்சாரம் பாயும் வசனக் கோர்வைகள் பிரமிக்க வைப்பவையாகும். மீண்டும் இணையாக நடித்த பண்டரிபாய் சில படங்களில் அன்னையாகவும், மீண்டும் "கௌரவம்" படத்தில் மனைவியாகவும் - "அன்னையின் ஆணை" இல் ஒரு சிவாஜிக்கு மனைவியாகவும் இன்னொரு சிவாஜிக்கு தாயாகவும் சளைக்காமல் ஈடுகொடுத்து நடித்தார்.



இதேபோன்று 1954இல் வீணை வித்துவான், புதுமை இயக்குனர் எஸ் பாலச்சந்தர் இயக்கி ஏவி-எம் தயாரிப்பாக வெளிவந்த "அந்த நாள்" இன்றும் கூட பேசப்படும் பேசும் படமாகும். ஹாலிவுட் படம் ஒன்றைப் பார்த்துப் பிரமிப்பது போல், சிவாஜி தன் திறமையை வெளிப்படுத்தியிருப்பார். கதைக்கரு அன்ட்டி சென்டிமென்ட் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது. பாடல்களே இல்லாமல் தயாரிக்கப்பட்ட முதல் தமிழ் படம். தாய் நாட்டின் ராணுவ ரகசியங்களை எதிரி நாட்டுக்கு (ஜப்பான்) காட்டிக்கொடுக்கும் உளவாளியாக சிவாஜி வேடம் ஏற்றிருந்தார். வளர்ந்து வரும் நடிகர் ஒருவருக்கு இப்படியான வேடம் ஏற்கும் அசாதாரண துணிச்சல் வந்து விடாது. அவரது தன்னம்பிக்கையும், திறமையுமே காரணம். கதாநாயகன் என்ற இமேஜ் துரோகச் செயல்களில் ஈடுபடும் பாத்திரத்தினால் பாதிக்கப்படும் என்று துளியளவும் பயப்படாமல் சிவாஜி தனது நடிப்பிலும் திறமையிலும் வைத்திருந்த துணிச்சல்மிக்க நம்பிக்கைக்கு உதாரணமாக இப்படத்தை கூறலாம். இதே படத்தில் சிவாஜியின் தன்னிலை விளக்கமாக ஒரு காட்சி வரும். நாயகி பண்டரிபாய் நாயகன் சிவாஜியிடம் காதல் கொண்டு திருமணம் செய்ய முன் கல்லூரி மாணவியாக சிவாஜியுடன் உரையாடும் காட்சி அது. நாயகி உஷா (பண்டரிபாய்) சிவாஜியை பார்த்து "மிஸ்டர் ராஜன்" உங்களுக்கு இவ்வளவு தேசபக்தியா?"

ராஜன்: அதுமட்டுமல்ல.. எனக்கு என் ஆராய்ச்சியில்.. வாழ்க்கையில் ஊக்கம் இருக்கிறது. திறமை இருக்கிறது. தொழிலில் முன்னேற வேண்டும் என்ற ஆவேசம் கொண்டவன் நான். நம் நாட்டுச் சரித்திரத்தில் என் பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும்"

ஆம்! அவரது கனவு மெய்பட்டது. இன்று இத்தனை ஆண்டுகளுக்குப் பின் அவரது வரலாறும் - வாழ்வும் என் போன்றவர்களால் பொறிக்கப்படுகிறது. நடிகர் திலகத்தின் கதாநாயகிகள் யாவரும் திறமை படைத்தவர்களாகும். சிவாஜியிடமிருந்து கற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள், பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவதைப் போன்று சிவாஜிக்கு நிகராக நடித்துப் புகழ் பெற்றவர்கள். பலரின் மத்தியிலே "இந்த அம்மாவுடன் நடிக்க எனக்கு வாய்ப்பு வராதா" என ஏங்கியவர் சிவாஜி என்று பலருக்குத் தெரியாது! பின்னாளில் அந்த அம்மாவையே ஓரம்கட்டச் செய்யுமளவிற்கு (திரையில்) முத்திரை பதித்தவர் நமது நடிகர் திலகம்.

*யார் அந்த (அம்மா) நாயகி? அது அடுத்த வாரம்...*

*கதாநாயகிகளும் காட்சிகளும் தொடர்ந்து வரும்...*

# இவ்வார ராசிபலன்

## 13-11-2020 வெள்ளி தொடக்கம் 19-11-2020 வியாழன் வரையும்




**மேஷம்:** பொல்லாத காலங்கள் சொல்லாமல் விலகக்கூடிய அற்புதமான வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத்தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரிந்து குடும்பம் ஒன்று சேரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பிரளய தேவி, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**ரிஷபம்:** ஆதாயமும், ஆதாரமும், அதிகாரமும் சேரக்கூடிய அற்புதமான வாரம். சுய வீடு வாங்க முயற்சி செய்யலாம். மங்களமான நாள். அரசு வாய்ப்பு தடைப்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். திருமண முயற்சி வெற்றி தரும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வேலவப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Z




**மிதுனம்:** ஆலய தரிசனத்தால் ஆத்மபலம் பெறக்கூடிய அற்புதமான வாரம். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். பழைய கடன் வசூலாகும். வாகனச் செலவு ஏற்படும். வெளிநாட்டு தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத் தொழிலில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். உதவிகள் கிடைக்கும் நாள். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: நவ தேவதை, அதிர்ஷ்ட எண்: 6,9,2,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,U




**கடகம்:** மேலான ஆசியும், மேதைகளின் நட்பும் கிடைக்கக்கூடிய வாரம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். கணி-னி துறையில் ஊதிய உயர்வு கிட்டும். திறமைகள் வெளிப்படும் நாள். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகள் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: பஞ்சபூதக் கடவுள், அதிர்ஷ்ட எண்: 6,0,2,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,N




**சிம்மம்:** இனிய கனாக்காணவும், இன்ப உலா செல்லவும் இனிமையான வாரம். காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: சுக்கிர பகவான், அதிர்ஷ்ட எண்: 4,6,1,5
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P




**கன்னி:** வீணான அலைச்சலும், வேதனைக் காலங்களும் விலகக்கூடிய அற்புதமான வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தேவி காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**துலாம்:** வாடும் நிலை விலகி வீடும் நிலமும் வாங்கக் கூடிய நல்ல வாரம். சிக்கனத்தை கையாள வேண்டும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். உடல் நலனில் அக்கறை தேவை. குடும்பத்தில் அமைதி நிலவும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கைகூடும். நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மன மகிழ்ச்சி அதிகர. இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஏழுமலை ஆண்டவர், அதிர்ஷ்ட எண்: 3,4,6,8
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,P




**விருச்சிகம்:** அனைத்து விதத்திலும் ஆதாயம் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். விரக்திகள் மறையும். வாகனத்தில் செலவு ஏற்படும். கலைத்துறையில் கௌரவம் கூடும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசிர்வாதம்கிடைக்கும். உடல்நலம் சீராகும். உற்சாகம் மேலோங்கும். உறவுகளால் நன்மை ஏற்படும். பயணம் வெற்றிதரும். நீண்டநாள் கனவு நிறைவேறும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. திண்டாட்டங்கள் மறையும். வேதனைகள் சாதகமாகும். சொந்த முயற்சிகள் பலன் கொடுக்கும். உத்தியோக உயர்வு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: திருமுருகக் கடவுள், அதிர்ஷ்ட எண்: 3,8,4,9
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,H




**தனுசு:** மனைவி மக்களால் மகிழ்ச்சி ததும்பக்கூடிய மகத்தான வாரம். இல்லம் தேடி வாய்ப்பு வரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். உறவுகளால் செலவு அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. பொருளாதாரம் மேம்படும். துணிவோடு செயல்படுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: சயன கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,9,8,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,K




**மகரம்:** தொழில் வகையில் மேன்மையும், தொகை தொகையாய் லாபமும் சேரக்கூடிய வாரம். வீடு, மனை யோகம் உண்டு. விவசாயம் லாபம் தரும். வியாபாரம் மந்தமாக இருக்கும். எதிர்ப்புகள் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். சேமிப்பு அதிகரிக்கும். ஆடம்பர பொருள் சேரும். பண வரவு மேலோங்கும். பாக்கிகள் வசூலாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உழைப்பு கடுமையாக இருக்கும். மனித நேயம் மிகுதியாகும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். குடும்பத்தில் குழப்பம் தீரும். சுபச் செய்தி தேடி வரும். ஆபரணப் பொருள் களவு போகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மங்கள மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,6,4,0
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,N




**கும்பம்:** வீரியமான செயல்பாடுகளால் விசேஷமான பலன்கள் கிடைக்கக்கூடிய வாரம். கன்னிப் பெண்களின் உற்சாகம் அதிகரிக்கும். உங்களால் மற்றவர்களுக்கு அதிகம் நன்மைகள் கிடைக்கும். திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். உறவினர் வருகை உண்டு. பெற்றோரின் ஆசி கிடைக்கும். கர்ம வினைகள் அகலும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. நிதானத்தோடு செயல்பட வேண்டும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். உடல் பொலிவு கூடும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சுவாமி தர்ம சாஸ்த்தா, அதிர்ஷ்ட எண்: 2,1,0,0
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,R




**மீனம்:** நாடிய பொருளும் தேடிய வாய்ப்பும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். கடன் உபத்திரவம் குறையும். குடும்ப கௌரவம் ஓங்கும். மற்றவர் தொல்லை நீங்கும். வெற்றி நிலை தொடரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். எதிர்பாராத லாபம் சேரும். எண்ணிய காரியம் கூடும். இல்லத்தில் நல்லவை நடக்கும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். பழையக் கடன் தீரும். புதிய வாய்ப்பு கூடும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். மாற்று எண்ணம் உதயமாகும். பெண்களின் திறமை பெருமை தரும். கற்பனை ஆற்றல் பெருகும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,3,0,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,W




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


## வீணாவின் கிறுக்கல்

சிரிக்க மறந்து,
சிறகை இழந்து,
சிதறி போன
சிட்டுக்குருவிகளே,
நின்று, நிமிர்ந்து
சற்றே திரிம்பிப்பாருங்கள்,
நீங்கள் இழந்தது
உங்கள் சிரிப்பும்
சிறகும் மட்டுமல்ல,
உங்களை நம்பி வந்தவரையும்
உங்களால் உருவாக்கப்பட்டவர்களையும்
அவர்களால் உருவான
உங்கள் வாழ்க்கையும்
கூடத்தான்.
இழந்தபின் ஏதைத்தேடி
ஓடுகிறீர்?????


Hon.
MARY NG, MP
MARKHAM – THORNHILL
905-479-8100
Mary.Ng@parl.gc.ca
16 Esna Park Drive, Unit 107
Markham, ON L3R 5X1
Happy Diwali
மகிழ்ச்சியான தீபாவளி
வாழ்த்துக்கள்

# அன்பின் தொனி - 586

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**என் தேவன் தம்முடைய கிருபையினால் என்னைச் சந்திப்பார்**

என் தேவனே, என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும், என்மேல் எழும்புகிறவர்களுக்கு என்னை விலக்கி உயர்ந்த அடைக்கலத்திலே வையும். அக்கிரமக்காரருக்கு என்னைத் தப்புவித்து, இரத்தப்பிரியரான மனுஷருக்கு என்னை விலக்கி இரட்சியும். இதோ, என் பிராணனுக்குப் பதிவிருக்கிறார்கள், கர்த்தாவே, என்னிடத்தில் மீறுதலும் பாவமும் இல்லாதிருந்தும், பலவான்கள் எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடுகிறார்கள். என்னிடத்தில் அக்கிரமம் இல்லாதிருந்தும், ஓடித்திரிந்து யுத்தத்துக்கு ஆயத்தமாகிறார்கள், எனக்குத் துணைசெய்ய விழித்து என்னை நோக்கிப்பாரும். சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலின் தேவனே, நீர் சகல ஜாதிகளையும் விசாரிக்க விழி த்தெழும்பும், வஞ்சகமாய்த் துரோகஞ்செய்கிற ஒருவருக்கும் தயை செய்யாதேயும். அவர்கள் சாயங்காலத்தில் திரும் பிவந்து, நாய்களைப்போல ஊளையிட்டு, ஊரைச்சுற்றித் திரிகிறார்கள். இதோ, தங்கள் வார்த்தைகளைக் கக்குகிறார்கள், அவர்கள் உதடுகளில் பட்டயங்கள் இருக்கிறது, கேட்கிறவன் யார் என்கிறார்கள். ஆனாலும் கர்த்தாவே, நீர் அவர்களைப் பார்த்து நகைப்பீர், புறஜாதிகள் யாவரையும் இகழுவீர். அவன் வல்லமையை நான் கண்டு, உமக்குக் காத்திருப்பேன், தேவனே எனக்கு உயர்ந்த அடைக்கலம். என் தேவன் தம்முடைய கிருபையினால் என்னைச் சந்திப்பார், தேவன் என் சத்துருக்களுக்குவரும் நீதிசரிக்கட்டுதலை நான் காணும்படி செய்வார். அவர்களைக் கொன்று போடாதேயும், என் ஜனங்கள் மறந்துபோவார்களே, எங்கள் கேடகமாகிய ஆண்டவரே, உமது வல்லமையினால் அவர்களைச் சிதறடித்து, அவர்களைத் தாழ்த்திப்போடும். அவர்கள் உதடுகளின் பேச்சு அவர்கள் வாயின் பாவ மாயிருக்கிறது, அவர்கள் இட்ட சாபமும் சொல்லிய பொய்யும் ஆகிய இவைகளினிமித்தம் தங்கள் பெருமையில் அகப்படுவார்களாக. தேவன் பூமியின் எல்லைவரைக்கும் யாக்கோபிலே அரசாளுகிறவர் என்று அவர்கள் அறியும் பொருட்டு, அவர்களை உம்முடைய உக்கிரத்திலே நிர்மூலமாக்கும், இனி இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கும். அவர்கள் சாயங்காலத்தில் திரும்பிவந்து, நாய்களைப்போல ஊளையிட்டு, ஊரைச்சுற்றித் திரிகிறார்கள். அவர்கள் உணவுக்காக அலைந்து திரிந்து திருப்தியடையாமல், முறு முறுத்துக்கொண்டிருப்பார்கள். நானோ உம்முடைய வல்லமையைப் பாடி, காலையிலே உம்முடைய கிருபையை மகிழ்ச்சியோடு புகழுவேன், எனக்கு நெருக்கமுண்டான நாளிலே நீர் எனக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமானீர். என் பெலனே, உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன், தேவன் எனக்கு உயர்ந்த அடைக்கலமும், கிருபையுள்ள என் தேவனுமாயிருக்கிறார்.
**- சங்கீதம் 59: 1-17**

**தேவன் தமது பரிசுத்தத்தைக் கொண்டு விளம்பினார்,**

தேவனே, நீர் எங்களைக் கைவிட்டீர், எங்களைச் சிதறடித்தீர், எங்கள்மேல் கோபமாயிருந்தீர், மறுபடியும் எங்களிட மாய்த் திரும்பியருளும். பூமியை அதிரப்பண்ணி, அதை வெடிப்பாக்கினீர், அதின் வெடிப்புகளைப் பொருந்தப் பண்ணும், அது அசைகின்றது. உம்முடைய ஜனங்களுக்குக் கடினமான காரியத்தைக் காண்பித்தீர், தத்தளிப்பின் மதுபானத்தை எங்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர். சத்தியத்தினிமித்தம் ஏற்றும்படியாக, உமக்குப் பயந்து நடக்கிறவர்களுக்கு ஒரு கொடியைக் கொடுத்தீர். உமது பிரியர் விடுவிக்கப்படும்படி, உமது வலதுகரத்தினால் இரட்சித்து, எனக்குச் செவிகொடுத்தருளும். தேவன் தமது பரிசுத்தத்தைக் கொண்டு விளம்பினார், ஆகையால் களிகூருவேன், சீகேமைப் பங்கிட்டு, சுக்கோத்தின் பள்ளத்தாக்கை அளந்து கொள்ளுவேன். கீலேயாத் என்னுடையது, மனோசேயும் என்னுடையது, எப்பிராயீம் என் தலையின் பெலன், யூதா என் நியாயப்பிரமாணிகன். மோவாப் என் பாதபாத்திரம், ஏதோமின்மேல் என் பாதரட்சையை எறிந்துபோடுவேன், பெலிஸ்தியாவே, என்னிமித்தம் ஆர்ப்பரித்துக்கொள். அரணான பட்டணத்திற்குள் என்னை நடத்திக்கொண்டுபோகிறவர் யார்? ஏதோம்மட்டும் எனக்கு வழிகாட்டுகிறவர் யார்? எங்கள் சேனைகளோடே புறப்படாமலிருந்த தேவரீர் அல்லவோ? எங்களைத் தள்ளிவிட்டிருந்த தேவரீர் அல்லவோ? இக்கட்டில் எங்களுக்கு உதவி செய்யும், மனுஷனுடைய உதவி விருதா. தேவனாலே பராக்கிரமம் செய்வோம், அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப்போடுவார்.
**- சங்கீதம் 60: 1-12**

**என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு**

தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது, அவரால் என் இரட்சிப்பு வரும். அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்ளூ நான் அதிகமாய் அசைக்கப்படுவதில்லை. நீங்கள் எதுவரைக்கும் ஒரு மனுஷனுக்குத் தீங்குசெய்ய நினைப்பீர்கள், நீங்கள் அனைவரும் சங்கரிக்கப்படுவீர்கள், சாய்ந்தமதிலுக்கும் இடிந்தசுவருக்கும் ஒப்பாவீர்கள். அவனுடைய மேன்மையிலிருந்து அவனைத் தள்ளும்படிக்கே அவர்கள் ஆலோ சனைபண்ணி, அபத்தம்பேசவிரும்புகிறார்கள், தங்கள் வாயினால் ஆசீர்வதித்து, தங்கள் உள்ளத்தில் சபிக்கிறார்கள். என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு, நான் நம்புகிறது அவராலே வரும். அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர், நான் அசைக்கப்படுவதில்லை. என் இரட்சிப்பும், என் மகிமையும் தேவனிடத்தில் இருக்கிறது, பெலனான என் கன்மலையும் என் அடைக்கலமும் தேவனுக்குள் இருக்கிறது. ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள், அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள், தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார். கீழ்மக்கள் மாயையும், மேன்மக்கள் பொய்யுமாமே, தராசிலே வைக்கப்பட்டால் அவர்களெல்லாரும் மாயையிலும் லேசானவர்கள். கொடுமையை நம்பாதிருங்கள், கொள்ளையினால் பெருமைபாரா ட்டாதிருங்கள், ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்காதேயுங்கள். தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன், வல்லமை தேவனுடையது என்பதே. கிருபையும் உம்முடையது, ஆண்டவரே! தேவரீர் அவனவன் செய்கைக்குத் தக்கதாகப் பலனளிக்கிறீர். **- சங்கீதம் 62: 1-12**

தேவனே, என் கூப்பிடுதலைக் கேட்டு, என் விண்ணப்பத்தைக் கவனியும். என் இருதயம் தொய்யும்போது பூமியின் கடையாந்தரத்திலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டுபோய்விடும். நீர் எனக்கு அடைக்கலமும், சத்துருவுக்கு எதிரே பெலத்த துருகமுமாயிருந்தீர்.

*தொடரும்...*



உள்ளத்தில் மகிழ்ச்சி மலரட்டும்...
இல்லத்தில் செல்வம் மலரட்டும்...
அனைவருக்கும்....! எங்களின் இதயம் கனிந்த

தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

UTHAYAN
உதயன்

Uthayan Canada's No.1 Tamil Newspaper
4062 Ellesmere Road Scarborough, ON M1C 1J2
T: 416.752.1524 F: 416.752.6703
www.uthayannews.ca

VJ-COLOMBO

STEELES
PODIATRY CLINIC

கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

WE ACCEPT
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

LIST OF SERVICES
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
iNFORCE LiFe Financial Services Inc.
RESP
Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing
UTHAYAN
உதயன்
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
PARK PLAZA
1646 VICTORIA PARK AVE., SUITE 1 (BETWEEN LAWRENCE & EGLINTON) TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
UTHAYAN உதயன்
FRUITS HABY
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1284 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 13, 2020

# Reopening Schools in Ontario, is Nationally a Leading Plan

**- Ontario Education Minister Stephen Lecce**

# ஒன்ராறியோ பாடசாலைகளை மீளவும் திறந்தது, தேசிய ரீதியில் ஒரு முதன்மைத் திட்டமாகும்"

**– மாகாண கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெசி**

(ஸ்காபுறோவிலிருந்து லோகன் லோகேந்திரலிங்கம்)



ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள பாடசாலைகளைத் மீளவும் திறந்து, அது மிகவும் சவால்கள் நிறைந்த ஒன்றாக தோன்றினாலும், கனடாவைப் பொறுத்தளவில் தேசிய ரீதியில் அது ஒரு முதன்மையான திட்டம் என்பதை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். மேற்படி திட்டத்தின் படி மீண்டும் திறக்கப்பட்டுள்ள ஒன்றாரியோவின் 5000 பாடசாலைகளில் என்றும் இல்லாதவாறு சுமார் 800 மருத்துவத்தாதியர்கள் பணியாற்றி எமது ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரை நோய்த் தொற்றிலிருந்து பாதுகாத்து வருகின்றார்கள்"

இவ்வாறு தெரிவித்தார், கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் திரு ஸ்டீபன் லெசி. கடந்த செவ்வாய்கிழமையன்று ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள பல்லின பத்திரிகையாளர்களின் பிரதம ஆசிரியர்களோடு அவர் நடத்திய இணையவழி ஊடகச் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேற்படிசந்திப்பின் மிக முக்கிமான நோக்கம், அண்மையில் ஒன்றாரியோ பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பெற்ற 2020 இற்குரிய வரவு செலவுத் திட்டமானது, ஒன்ராறியோவில் கல்வி மேம்பாட்டிற்காகவும் , பாடசாலைகள் மற்றும் மாணவர்கள் ஆசிரியர் ஆகியோரின் முன்னேற்றத்திற்காவும் எவ்வாறு உதவப் போகின்றது என்பதை பற்றிய தனது கருத்துக்களை பத்திரிகையாளர்களோடு பகிர்ந்து கொள்வதற்காகவே என்றிருந்தது.

எனினும் அமைச்சர் அவர்கள் உரையாற்றி முடிந்த பின்னர் கேள்வி பதில் நேரத்தில் பத்திரிகை ஆசிரியர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்களிலிருந்து பல முன்னேற்றகரமாக விடயங்களை தெரிந்து கொள்ளவும் முடிந்தது. அமைச்சர் லெசி அவர்கள் முதலில் உரையாற்றியபோது, பின்வருமாறு கூறினார். " முன்னைய வரவு செலவுத் திட்டங்களிலும் பார்க்க இந்த வருடத்தின் வரவு செலவுத் திட்டத்தில் ஏனைய அமைச்சுக்களுக்குப் போன்றே அதிகளவில் ஒதுக்கீடுகள் இடம்பெற்றுள்ளன. ஆனால் நிதி மற்றும் இருந்தால், நாம் இந்த நெருக்கடிகள் நிறைந்த கோவிட்-19 தொற்றினால் ஏற்பட்டுள்ள அச்ச சூழ்நிலையிலும் துணிச்சலாக உள்ள பெற்றோர், மாணவர்கள், அதிகாரிகள், மற்றும் முன்வரிசையிலிருந்து பணியாற்றும் வைத்தியர்கள் மற்றும் தாதியர்களை நான் பாராட்டுகின்றேன். அவர்களின் துணிச்சலான எண்ணம் தான் எமது பாடசாலைகளை நாம் மீண்டும் திறந்து சிறு சிறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து கற்றல் நடவடிக்கைகளை தொடரக் கூடியதாக உள்ளது. பாடசாலைகளைத் திறந்த பின்னர் பல அச்சத்துடன் உரையாடத் தொடங்கினார்கள். "மாணவர்களுக்கு நோய்த் தொற்று ஏற்பட்டு அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கபபடப் போகின்றது" என்று. ஆனால் தற்போது திறக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கும் சுமார் 5000 ஒன்றாரியோ பாடசாலைகளில் தமது கற்றலை வகுப்பறைகளில் தொடரும் மாணவர்களில் சிறிய எண்ணிக்கையுடையவர்களுக்கே தொற்று ஏற்பட்டது. எனினும் அவர்களுக்கு தகுந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டும், சுய தனிமைப் படுத்தலுக்கு உள்ளாகியும் குணமடைந்துள்ளார்கள். பாடசாலைகளில் பணியாற்றும் தாதியர்கள் மற்றும் அதிபர்கள் ஆசிரியர்கள் ஆகியோர் சிறந்த முறையில் தங்கள் கடமைகளைச் செய்து வருகின்றார்கள். மேலும் எமது ஒன்ராறியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் எனக்கும் எனது அமைச்சு அதிகாரிகளுக்கும் தரும் உற்சாகமான ஆதரவை நான் பாராட்ட வேண்டும். அவரது ஆதரவு மிகவும் போற்றுதற்கு உரியது" என்றார்.

தொடர்ந்து பத்திரிகை ஆசிரியர்களின் கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளித்தார்

ஒரு கேள்விக்கு அவர்கள் பதிலளிக்கையில்" எமது மாகாணத்தில் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு குறிப்பாக 12 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு 200 டாலர்களும் ஊனமுற்ற மாணவர்களுக்கு 250 டாலர்களும் வழங்கப்படவுள்ளன. இதற்காக 80 மில்லியன் டாலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த பண உதவியின் மூலம் எமது மாகாணத்தில் உள்ள நடுத்தர வர்க்கக் குடும்பங்களின் பணச்சுமை சற்று குறையும் என்று நான் நம்புகின்றேன்" என்றார்.

தொடர்ந்து உதயன் பத்திரிகை சார்பாக கேட்கப்பட்ட, சர்வதேச மொழிகளைக் கற்கும் மாணவர்களுக்கு உங்களிடம் எதாவது மகிழ்ச்சியான செய்தி ஏதும் உண்டா என்ற கேள்விக்கு அமைச்சர் சிரித்தபடி பதிலளித்தார்.

"எமது மாகாணத்தில் சர்வதேச மொழிகளின் பயன்பாடு எவ்வாறு உள்ளது என்பதை நான் நன்கு உணர்கின்றேன். சிலர் கதைப்பது போல, எமது மாகாணத்தில் பல கல்விச் சபைகளின் கீழே இயங்கிவரும் சர்வதேச மொழிகள் கற்பிக்கும் பிரிவுகளை மூடிவிடும் எண்ணம் எமக்கு இல்லை. இந்த வருடத்தின் வரவு செலவுத் திட்டத்திலும் அதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக எவ்வித இடைவெளியும் இன்றி இந்த சர்வதேச மொழிகள் கற்பிக்கும் பிரிவுகள் வெற்றிகரமாக இயங்கவுள்ளன" என்றார் அமைச்சர்.

# Ontario NDP's new Housing Plan will help families to keep up with their Mortgage or Rent

**- Ontario NDP Leader Andrea Horwath**

# ஒன்ராறியோ என்டிபி கட்சியின் வீட்டு வசதித் திட்டமானது நடுத்தரக் குடும்பங்களின் வாடகை அல்லது மோட்கேஜ் கட்டணத்தை செலுத்த உதவும்

**– ஒன்ராறியோ என்டிபி கட்சித் தலைவர் அன்றியா ஹோர்வாத்**



கனடாவின், ஒன்ராறியோ மாகாண பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவியும், கட்சியின் தலைவியுமாகிய அன்றியா ஹோர்வாத் அவர்கள் நேற்று மதியம் ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள பல்லின பத்திரிகையாளர்களோடு இணைய வழி ஊடகச் சந்திப்பை நடத்தினார். அவருக்கு உதவியாக ஒன்ராறியோ மாகாண பாராளுமன்றத்தின் மற்றுமொரு என்டிபி கட்சியின் பெண் உறுப்பினரான டொலி பேகம் அவர்களும் அங்கு கலந்து கொண்டார்.

இவர்களோடு ஸ்காபுறோ நகரில் கோவிட்-19 தாக்கம் காரணமாக தனது தொழிலை இழந்தும், வருமானத்தை இழந்தும், தொடர்ந்து இவற்றால் தனது குறைந்த வாடகை கொண்ட தனது வீட்டையும் இழந்த நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மொகமட் யுனஸ் என்பவரும் கலந்து கொண்டார்.

எதிர்க் கட்சி தலைவியான அன்றியா ஹோர்வாத் அவர்கள் தனது உரையில் பின்வருமாறு உருக்கமாகக் கூறினார்.

"எமது ஒன்ராறியோ மாகணத்தில் குறிப்பாக ஸ்காபுறோ நகரத்தில் நடுத்தர வகுப்பைச் சார்ந்த குடும்பங்களுக்கு வீட்டு வசதிகள் என்பது ஒரு எட்டாத ஒன்றாகவே உள்ளது. . அதனால் எமது கட்சியின் தேர்தல் அறிக்கையில் நாம் எப்போதும் குறிப்பிடுவது போன்று, பாதிக்கப்பட்ட மக்களின் வதிவிடப் பிரச்சனைக்கு எம்மாலியன்ற தீர்வினைப் பெற்றுக்கொடுப்பது என்ற தீர்மானத்தில் நாம் தற்போது இருந்து திட்டமிட்டு வருகின்றோம். எமது புதிய வீட்டு வசதிகள் திட்டத்தின் பிரகாரம் , மக்கள் நிரந்தரமானதும், பாதுகாப்பானதுமான வீட்டு வசதிகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதை நிச்சயமாக நிறைவேற்றுவோம்.

எனவே பாதிக்கப்பட்ட அல்லது தேவைகள் உள்ளவர்கள் என்பதை ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நிரூபிக்கும் போது, அவர்களின் வீட்டு வாடகைக் கட்டணத்தை அல்லது அவர்கள் சொந்தமாக வீடு ஒன்றை வாங்குவதற்கு விரும்பும் பட்சத்தில், அவர்களுக்கு உரிய ஆரம்ப கட்டுப்பணத்தையும் (downpayment) பின்னர் அவர்களுக்குரிய மாதாந்த மோட்கேஜ் கட்டணத்தையும் எமது அரசாங்கமே வழங்கும் என்று உத்தரவாதத்தை நாம் வழங்குகின்றோம்.

இதன் மூலம் எமது மக்களின் வதிவிடப் பிரச்சனையை தீர்த்தவர்கள் என்ற மனநிறைவு எமக்கும், அதனால் பலன்பெற்றவர்கள் என்ற திருப்த்தியையும் மக்களும் பெறுவார்கள் என்று குறிப்பிட விரும்புகின்றோம்

இந்தத் திட்டத்தின் மூலம் வீட்டுச் சொந்தக்காரர்களின் வாடகை உயர்வு மற்றும் திடீரென விட்.டை விட்டு நீங்கும்படி தொந்தரவு கொடுப்பது போன்ற இடையூறுகளிலிருந்து எமது மக்கள் விடுபடக் கூடிய வாய்ப்புக்கள் இலகுவாகக் கிடைக்கும்

தற்போது உள்ள கோவிட்-19 நோயின் தாக்கத்தால் சாதாரண மக்கள் கடும் பாதிப்புக்களுக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். இதற்கு முன்னர் ஆட்சி செய்ய மாகாண அரசாங்கங்கள் தங்களுக்கு சாதகமான பெரும் முதலாளிகளுக்கு சார்பாக திட்டங்களை வகுத்து, அவர்கள் பெரும் இலாபம் ஈட்டும் வகையில் அரசாங்கம் மூலமாக உதவினார்களே தவிர சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவோ அன்றி அவர்களது கஸ்டங்களை நீக்கவோ முன்வரவில்லை. மேலும் செல்வந்தர்களான வீட்டு உரிமையாளர்கள் அடிக்கட வாடகைக் கட்டணத்தை உயர்த்துவதால் சாதாரண மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் மிக அதிகம். எனவே எமது புதிய வீட்டு வசதித் திட்டமானது சாதாரண மக்களின் வாழக்கையையும் அவர்களது வீட்டு வசதிகளையும் மேம்படுத்தும் என்று உறுதியாகக் கூறுகின்றோம்" என்றார்.

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca